***கவனிக்க*** *.- 25.10.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (III) *பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1835 - 2013 නොවැම්බර් මස 01 වැනි සිකුරාදා - 2013.11.01

*1835 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2040 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 2045 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | 2047 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

## நவகத்தேகம பிரதேச சபை

நவகத்தேகம பிரதேச சபை பதவி வெற்றிடம்

நவகத்தேகம பிரதேச சபையில் வெற்றிடமாக உள்ள கீழ் காணும் பதவிகளுக்கு தகைமையுள்ளவர்களை தெரிவு செய்து நியமிப்பதற்காக உரிய தகைமைகள் உள்ள நவகத்தேகம பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் மாதாந்தம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1. | சுகாதார ஊழியர் | 01 | ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160-ரூ. 17,600 | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் 8 ஆம் வகுப்பு (9 ஆம் ஆண்டு) சித்தி அடைந்து இருத்தல் வேண்டும். |
| 2. | பாதை ஊழியர் | 05 | ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160-ரூ. 17,600 | க. பொ. த. (சா/த) பரீட்சையில் 02 பாடங்களிலாவது சித்தி அடைந்திருத்தல் வேண்டும். (விருப்பத்துக்குரிய பாடங்கள் தவிர்ந்த). (தற்போது அமைய, தற்காலிக, குத்தகை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள ஊழியர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட ரீதியில் அப்போது இருந்த சேர்த்துக் கொள்ளும் நடைமுறையின் கல்வித் தகைமைகள் போதுமானது) |
| 3. | குழாய் கிணறு தொழில்நுட்பவியலாளர் | 01 | ரூபா 12,210-10×130-10×145-10×160-10×170-ரூபா 18,600 | **வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு:** க. பொ. த. (சா/த) பரீட்சையில் 02 பாடங்களிலாவது சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.<br><br>**உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு:** மாகாண சபை அரச சேவையில் நவகத்தேகம பிரதேச சபையில் நிரந்தர பதவி வகிப்பவர்களுக்கு அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் 08 ஆம் வகுப்பு (09 ஆம் ஆண்டு) சித்தி அடைந்து இருத்தல் வேண்டும்.<br><br>(தற்போது அமைய, தற்காலிக, குத்தகை அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள ஊழியர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட ரீதியில் அப்போது இருந்த சேர்த்துக்கொள்ளும் நடைமுறையின் கல்வித்தகைமைகள் போதுமானது.)<br><br>**தொழில்சார் தகைமைகளும் மற்றும் அனுபவமும் :**<br><br>01. பதவியுடன் தொடர்புடைய தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட தொழில்பயிற்சி பற்றிய NVQ 2 அல்லது 3 ஆம் தரச் சான்றிதழ் பெற்றிருத்தல் ;<br>அல்லது |

| இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் மாதாந்தம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | 02. இந்தத் துறையில் பயிற்சிக் காலத்துக்குள் அரச நிறுவனம் ஒன்றில்/ அரச கூட்டுத்தபானம்/ சபை/ நியதிச்சட்ட முறை நிறுவனம் அல்லது வேறும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 02 வருடத் துக்கு மேற்பட்ட காலம் பிரயோக பயிற்சி அனுபவம் பெற்று இருத்தல் வேண்டும் (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்). |
| 04. | மின் தொழில் நுட்பவியலாளர் | 01 | ரூபா 12,470-10×130-10×145-10×160-10×170-ரூபா 18,860 | **வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு** க. பொ. த. (சா/ த) பரீட்சையில் இரண்டு முறைக்கு மேற்படாத தவணைகளில் இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்தி உடன் 06 பாடங்களாவது சித்தி அடைந்திருத்தல் வேண்டும். ஆகக் குறைந்தது ஒரே முறையில் 05 பாடங் களாவது சித்தி அடைந்திருத்தல் வேண்டும் (விருப்பத்துக்குரிய பாடங்கள் தவிர்ந்த).<br><br>**உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு:** மாகாண அரச சேவையில் நவகத்தேகம பிரதேச சபையில் நிரந்தர பதவி வகிப்பவர்களுக்கு அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் 8 ஆம் வகுப்பு (9 ஆம் ஆண்டு) சித்தி அடைந்து இருத்தல் வேண்டும். (தற்போது அமைய, தற்காலிக, அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ள ஊழியர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட ரீதியில் அப்போது இருந்த சேர்த்துக்கொள்ளும் நடைமுறையின் கல்வித் தகைமைகள் போதுமானது.)<br><br>**தொழில்சார் தகைமைகளும் மற்றும் அனுபவமும் :**<br><br>01. பதவியுடன் தொடர்புடைய தொழில் பயிற்சி அதிகார சபை யினால் வழங்கப்பட்ட தொழில் பயிற்சி பற்றிய NVQ 2 அல்லது 3 ஆம் தர சான்றிதழ் பெற்றிருத்தல் ;<br>அல்லது<br>02. இந்தத் துறையில் பயிற்சிக் காலத்துக்குள் அரச நிறுவனம் ஒன்றில்/ அரச கூட்டுத்தபானம்/ சபை/ நியதிச்சட்ட முறை நிறுவனம் அல்லது வேறும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் 02 வருடத்துக்கு |

| இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் மாதாந்தம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | மேற்பட்ட காலம் பிரயோக பயிற்சி அனுபவம் பெற்று இருத்தல் வேண்டும் (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்). |
| 5. | சாரதி | 02 | ரூபா 12,470-10×130-10×145-10×160-10×170-ரூபா 18,860 | **வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு** க. பொ. த. (சா/த) பரீட்சையில் இரண்டு முறைக்கு மேற்படாத தவணைகளில் இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்தி உடன் 06 பாடங்களாவது சித்தி அடைந்திருத்தல் வேண்டும். ஆகக் குறைந்தது ஒரே முறையில் 05 பாடங்களாவது சித்தி அடைந்திருத்தல் வேண்டும். (விருப்பத்துக்குரிய பாடங்கள் தவிர்ந்த).<br><br>**உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு** மாகாண அரச சேவையில் நவகத்தேகம பிரதேச சபையில் நிரந்தர பதவி வகிப்பவர்களுக்கு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் 8 ஆம் வகுப்பு (9 ஆம் ஆண்டு) சித்தி அடைந்து இருத்தல் வேண்டும். (தற்போது அமைய, தற்காலிக, குத்தகை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப் பட்டு உள்ள ஊழியர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட ரீதியில் அப்போது இருந்த சேர்த்துக் கொள்ளும் நடைமுறையின் கல்வித் தகைமைகள் போதுமானது.)<br><br>**தொழில்சார் தகைமைகளும் மற்றும் அனுபவமும் :**<br><br>01. தார் பாரம் 34 அந்தருக்கு மேற்பட்ட கனரக மோட்டார் வாகனங்கள் மற்றும் பாரமான டேலர்கள், மற்றும் பிரயாணிகள் 32 பேருக்கு கூடுதலாக ஏற்றிச் செல்லக்கூடிய பேருந்து வண்டிகளை செலுத்தக் கூடியதாக மோட்டார் வாகன கமிஷனர் அவர்களால் வழங்கப் பட்ட தேர்ச்சிகள் பற்றிய அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும். ( A வகுப்பு சாரதி அனுமதிப் பத்திரம்)<br><br>02. சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றதன் பின்னர் சாரதியாக 03 வருடங்கள் வேலை செய்த அனுபவம் பெற்றிருக்க வேண்டியதுடன் அதை அத்தாட்சிப்பத்திரம் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும். |

**2. தேவையான ஏனைய தகைமைகள்.-**

(1) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு வயது 18 வருடங்களுக்கு குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது வடமேல் மாகாண அரச சேவையில் நிரந்தர சேவையில் உள்ளவர்களுக்கு ஆகக்கூடிய வயது எல்லை செல்லுபடியாகமாட்டாது) ;

(2) விண்ணப்பதாரிகள் பரம்பரையாக அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(3) விண்ணப்பதாரி நவகத்தேகம பிரதேச சபை அதிகார எல்லைக்குள் மூன்று வருடங்களுக்கு குறைவில்லாத கால எல்லை நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (வசிக்கும் பிரதேச கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்படுகின்ற அத்தாட்சிப்பத்திரத்தில் குறிப்பிட்ட பிரதேச செயலாளர் இனை ஒப்பமிட்டு வழங்கப்பட்ட கடிதம் மூலம் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்) ;
(4) விண்ணப்பதாரி நல்லொழுக்கமும் நல்ல தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும் ;
(5) இலங்கைத் தண்டனைக் கோவையின் பிரகாரம் நீதிமன்று ஒன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டு தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது ;
(6) மாகாண அரச சேவையில் உள்ள நிரந்தர உத்தியோகத்தர்களுக்கு இந்தப் பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு அண்மித்த 05 வருட காலத்துக்குள் குற்றம் ஒன்றுக்கு (எச்சரிக்கை செய்வது தவிர்ந்த) தண்டனை பெற்றிருத்தல் கூடாது. குறிப்பிட்ட மிக அண்மித்த 05 வருடங்களுக்குள் அனைத்து சம்பள அதிகரிப்பையும் உரிய காலத்துக்குள் பெற்றிருத்தல் வேண்டியதுடன் விரும்பத் தகுந்த சேவைக் காலத்தைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
(7) விண்ணப்பதாரிகள் குறிப்பிட்ட பதவிகளுக்கு நேராக குறிப்பிடப்பட்டு உள்ள ஆகக் குறைந்த தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**3. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

(1) இந்தப் பதவிகள் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும் ;
(2) விதவைகள்/அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்புப் பணம் செலுத்தல் வேண்டும் ;
(3) தெரிவு செய்யப்படுபவர்கள் (03) மூன்று வருட நன்னடத்தைக் காலத்துக்கு உட்படுத்தப்படுவார்கள் ;
(4) இந்தப் பதவிகளுக்குச் சேர்த்துக் கொள்ளப்படுபவர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் ஒழுங்கு விதிகளுக்கும், நிதிக் கட்டளைச்சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கும், திணைக்களங்களின் கட்டளைகளுக்கும், அரசு அல்லது மாகாண சபையினால் இடைக்கிடை வெளியிடுகின்ற ஒழுங்கு விதிகளுக்கும், உடன்பட்டு செயற்படுவதற்கு ஊழியர்கள் கட்டுப்படுதல் வேண்டும்.

**4. பதவிக்கு சேர்த்துக்கொள்ளும் முறை :**

(1) தேவைக்கு ஏற்றவாறு எழுத்துமூல பிரயோக முறையிலான அல்லது நேர்முகப் பரீட்சைக்கு உற்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள் ;
(2) விண்ணப்பப்படிவத்துடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அத்தாட்சிப்பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டியதுடன் மூல சான்றிதழ்கள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
(ஆ) கல்விச் சான்றிதழ்கள்
(3) தனது வசிப்பிடத்தை உறுதிப்படுத்துவதற்காக பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட அத்தாட்சிப்பத்திரம் ;
(4) அண்மையில் பெற்றுக்கொண்ட நல் ஒழுக்கச் சான்றிதழ்கள் இரண்டு (அதில் ஒன்று கிராம உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஒன்றாக இருத்தல் வேண்டும்.)
(5) தொழில்சார் அல்லது சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ்கள் இருப்பின் அச் சான்றிதழ்கள் ;
(6) சாரதிகளைச் சேர்த்துக் கொள்ளும் போது திணைக்களத்தில் இருந்து ஒரு பிரதி நிதியும், மோட்டார் வாகன திணைக்களத்தில் இருந்து மோட்டார் வாகனப் பரிசோதகர் ஒருவரும், பொலிஸ் திணைக்களத்தில் இருந்து போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் அல்லது அவர்கள் அடங்கிய ஒரு சபையினால் நடாத்தப்படுகின்ற வாகனம் செலுத்தும் நிபுணத்துவத்தை பரீட்சிக்கும் பரிசீலனையில் சித்தி பெறல் வேண்டும்.
(7) அடிப்படை தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.
(8) விண்ணப்பதாரிகள் இங்கு கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2013.11.15 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக 'செயலாளர், பிரதேச சபை, நவகத்தேகம' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலின் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பம் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்பட்டதற்கு இடைப்பட்ட கால எல்லைக்குள் அல்லது இந்த ஆட்சேர்த்துக் கொள்வதை தாமதப்படுத்துவதற்கு அல்லது மாற்றங்கள் செய்வதற்கு அல்லது இந்த அறிவித்தலை இரத்துச் செய்வதற்கான பூரண உரிமை நவகத்தேகம பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

எச். எம். எஸ். ஹேரத்,
செயலாளர்,
நவகத்தேகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
நவகத்தேகம,
2013, ஒற்றோபர் 10.

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

**நவகத்தேகம பிரதேச சபை**

*.......................................................................... பதவி*

1. விண்ணப்பதாரியின் பெயர் முதல் எழுத்துக்களுடன் :----.
   முதல் எழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் :----.
2. தபால் முகவரி :----.
3. பிறந்த திகதி :-
   ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
4. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு வயது :-
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
6. ஆணா/பெண்ணா :----.
7. திருமணமானவரா? திருமணமாகாதவரா? :----.
8. தேசிய இனம் :----.
9. நீர் இலங்கைப் பிரசையா? அப்படியாயின் பிறப்பிலா? பதிவின் மூலமா? என்பது பற்றி :----.
10. கல்வித் தகைமைகள் (சான்றுப் பத்திரங்களின் புகைப்படப் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்) :----.
11. நீர் தற்போது அரச சேவையில் கடமை புரிகின்றீரா? அப்படியாயின் பதவி, சேவை செய்யும் இடம், மற்றும் அந்தப் பதவியின் தன்மை நிரந்தரம்/அமைய/தற்காலிகம் :----.
12. தகைமைகள் மற்றும் சேவை அனுபவங்கள் :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும், சரியானது என்றும் உறுதிமொழிகின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களின் ஏதேனும் உண்மைக்குப் புறம்பானது அல்லது பிழையானது என்று இந்த நியமனத்துக்கு தெரிவு செய்வதற்கு முன்னர் தெரிய வரும் இடத்து நான் தகுதியற்றவன் ஆவேன் என்றும், நியமனம் கிடைத்ததன் பின்னர் அப்படியான விடயம் நிரூபிக்கப்படுமிடத்து எதுவிதமான நஷ்ட ஈடும் இன்றி பதவியிலிருந்து விளக்கப்படுவதற்கு ஆட்படுவேன் என்றும் அறிவேன்.

---------,
விண்ணப்பதாரிரின் கையொப்பம்.

திகதி :----.

**13. நிறுவன/தலைவரின் சான்றிதழ்**

(தற்போது அரச சேவையில் /மாகாண அரச சேவையில்/நிரந்தரம்/அமைய/தற்காலிக/குத்தகை அடிப்படையில் வேலை செய்யும் விண்ணப்பதாரிகளுக்கு)

இந்த விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ............................................. ஆந் திகதி முதல் தற்போது இந்த திணைக்களத்தில்/தாபனத்தில் .......................... நிரந்தரம்/அமைய/தற்காலிகம் பதவியில் வேலை செய்கின்றார். அவர் வேலைகள், வரவு, நடத்தை விருப்பத்துக்குரியது என்றும் மேலே 01 முதல் 08 வரை குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் இந்த அலுவலகத்தில் உள்ள அறிக்கைகளின் அடிப்படையில் நான் தனிப்பட்ட ரீதியில் பரிசீலனை செய்து பார்த்ததாகவும், அவைகள் சரியானது என்றும் 2013, ஆண்டு ............... மாதம் .................. ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கை எழுத்து வைத்ததாகவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

------,
நிறுவன/திணைக்கள முதல்வரின் கையொப்பம்.

சான்றுப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

11-26

திருத்தம்

**ஜா-எல பிரதேச சபை**

**27.09.2013 ஆந் திகதிய அரச வர்த்தமானியின் பகுதி IV (ஆ) இல் பிரசுரிக்கப்பட்ட ஜா-எல பிரதேச சபையின் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தல்**

அட்டவணை 01 இன் கீழ் சாரதி II ஆ பதவிக்காக ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான கல்வித் தகைமைகள் பின்வருமாறு திருத்தப்படல் வேண்டும் :-

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு தடவைகளிற்கு மேற்படாது இரு திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஒரே தடவையில் ஆகக்குறைந்தது 5 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)

அவ்வாறே விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 08.11.2013 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

எல். ஏ. மஞ்சுளா சமன்தி,
செயலாளர்,
ஜா-எல பிரதேச சபை.

பிரதேச சபை,
ஜா-எல,
கந்தானை,
2013, ஒற்றோபர் 15.

11-82

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**புளத்கொஹுபிடிய பிரதேச சபை**

புளத்கொஹுபிடிய பன்னல வலயம் எழுச்சிப்பெற்ற பிரதேசமாக நியமித்தல்

2011, மே மாதம் 26 ஆந் திகதி இடம்பெற்ற புளத்கொஹுபிடிய பிரதேச சபை பொதுச் சபை கூட்டத்தில் தீர்வு இலக்கம் 5 இன் கீழ் புதிய வருமான வழி மார்க்கமாக நாகரிக வலயமாக அபிவிருத்தி செய்யப்பட்ட எழுச்சிப்பெற்ற பிரதேசமாக பிரகடனப்படுத்துவதற்காக பன்னல வலயம் பொருத்தமானதென யோசனை சம்மதிக்கப்பட்டதுடன், அதற்காக 1987 ஆம் அண்டின் 15 ஆம் இலக்க அடிப்படைச் சட்டத்தின் பிரதேச சபை சட்டத்தில் 134 (1) கட்டளைச்சட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள அதிகார பிரதேசம் புளத்கொஹுபிடிய வாரச்சந்தை அருகிலுள்ள இலக்கம் 26/5 பாலத்திலிருந்து புளத்கொஹுபிடிய ருவன்வெல்ல பாதையில் வேகட இலக்கம் 34/5 பாலம் வரையான பிரதேசம் பிரதான பாதையின் சரி மத்தியிலிருந்து இரு புறமும் இரண்டு சங்கிலி தூரம் எழுச்சிப்பெற்ற பிரதேசமாக பிரகடனப்படுத்துவதற்காக சபரகமுவ மாகாண நிர்வாக அமைச்சருடைய அனுமதியின் கீழ் கேகாலை மாகாண நிர்வாக உதவி ஆணையாளர் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட வலயம் (பன்னல வலயம்) புதிய வரிப்பண கட்டணம் ஒதுக்கக்கூடிய பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஒதுக்கக்கூடிய வரிப்பணம் 5 சதவீதம் என்பது பற்றியும் புளத்கொஹுபிடிய பிரதேச சபைக்காக பிரகடனப்படுத்துகின்றேன்.

அந்த வலய வரைப்படம் கீழே காட்டப்பட்டுள்ளது.

டி. பி. வி. ருவான் சஞ்ஜீவ தியசுன்னத,
தலைவர்,
புளத்கொஹுபிடிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
புளத்கொஹுபிடிய,
2013, ஒற்றோபர் 08.

11-53


Environmental Map- Bulathkohupitiya Pradeshiya Sabha
Boundary
Contour
Hospital
School
Police Station
Post Office
Sub Post Office
Buddhist Temple
Hindu Temple
Utilities
Forest
Paddy
River
Rock
Tank
Water Hole
Main Road - A Class
Main Road - B Class
Minor Road
Jeep or Cart Track
N
to Kegalle
0 1 2 Kilometers
Sri lnka Institute of Local Governance

### கொழும்பு மாநகர சபை

மிருக வதை சட்டத்தின் கீழ் 272 ஆம் அத்தியாயம் 17(1) ஆம் பகுதியின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி கொழும்பு மா நகர சபையின் மாநகர முதல்வர் ஆகிய நான், 2014 ஆம் ஆண்டின் கீழ் காணப்படும் முதலாவது, இரண்டாவது அட்டவணைகளின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள தினங்களிலும், அரசினால் பிரகடனப்படுத்தப்படும் தினங்களிலும் என்னால் இடைக்கிடை அறிவிக்கப்படும் தினங்களிலும், கொழும்பு நகரத்தினுள் இறைச்சிக்காக மிருகங்களை வெட்டுதலும் விற்பனை செய்தலும், விற்பனைக்காக தொங்கவிடப்படுதலும், இறைச்சி விற்கும் இடங்கள் திறந்து வைக்கப்படுதலும் அறவே தவிர்க்கப்படல் வேண்டும் என அறிவிக்கின்றேன்.

அஹமட் ஜமல்டீன் மொஹொமட் முசம்மில்,
மாநகர முதல்வர்,
கொழும்பு மாநகர சபை.

நகர மண்டபம்,
கொழும்பு 7,
2013, ஒற்றோபர் 10.

**1 ஆவது அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| சனவரி | 15 | - | துருது மாத போயா தினம் |
| பெப்புருவரி | 14 | - | நவம் மாத போயா தினம் |
| மாச்சு | 16 | - | மெதின் மாத போயா தினம் |
| ஏப்பிரல் | 14 | - | பக் மாத போயா தினம் |
| மே | 14 | - | வெசாக் மாத போயா தினம் |
| மே | 15 | - | வெசாக் மாத போயா தினத்திற்கு அடுத்த நாள் |
| யூன் | 12 | - | பொசொன் மாத போயா தினம் |
| யூலை | 12 | - | எசல மாத போயா தினம் |
| ஓகத்து | 10 | - | நிகினி மாத போயா தினம் |
| செத்தெம்பர் | 08 | - | பினர மாத போயா தினம் |
| ஒற்றோபர் | 08 | - | வப் மாத போயா தினம் |
| நவெம்பர் | 06 | - | இல் மாத போயா தினம் |
| திசெம்பர் | 06 | - | உந்துவப் மாத போயா தினம் |

**2 ஆவது அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| பெப்புருவரி | 04 | - | தேசிய சுதந்திர தினம் |
| மே | 01 | - | உலக தொழிலாளர் தினம் |
| ஒற்றோபர் | 04 | - | உலக மிருக தினம் |

11-54

### அப்புத்தளை நகர சபை

வரிப்பணம் அமுல்படுத்தல் - 2014

அப்புத்தளை நகர சபையினால் 2013 ஆம் வருடத்தின் புரட்டாதி மாதம் 26 ஆந் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் எடுத்த தீர்வின் இலக்கம் 4 : 3 கீழ், கீழ் குறிப்பிட்ட விடயங்கள் சபையின் தீர்மானங்களுக்கு அமைவானது என பொது மக்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

நகர சபை விதிமுறைகள் 255 ஆவது (அத்தியாயம்) 160, 166 ஆம் பிரிவின்படி அப்புத்தளை நகர சபை மூலம் செயற்படக் கூடிய விசேட நிபந்தனையின்கீழ் விடுப்பு செய்தலுக்குரிய அப்புத்தளை நகர சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ளன :-

1. அனைத்து வதிவிட மற்றும் தரிசு நிலங்களின் வருடாந்த மதிப்பீட்டு பெறுமதியில் நூற்றுக்கு ஐந்த வீதம் (5%) வரிப்பணம் ;
2. வதிவிட மற்றும் தரிசு நிலம் அல்லாத ஏனைய அனைத்து சொத்துக்களின் வருடாந்த மதிப்பீட்டு பெறுமதியில் நூற்றுக்கு பத்து வீதம் (10%) வரிப்பணம் ;
3. நகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள அரச மற்றும் கூட்டுத்தாபனத்திற்குரிய சொத்துக்களின் வருடாந்த மதிப்பீட்டு பெறுமதியில் நூற்றுக்கு பதினான்கு வீதம் (14%) 2013 ஆம் ஆண்டுக்காக அறவிடப்படும் ;
4. நகர சபை விதிமுறைகள் 160 (5) பிரிவின்படி 2014.01.31 ஆந் திகதி பி. ப. 3.00 மணிக்கு முன் வருடத்திற்கான உரிய முழு வரிப்பணத்தையும் செலுத்துவதன் மூலம் நூற்றுக்கு பத்து வீத (10%) கழிவை பெற்றுக்கொள்ள முடியும் என்பதை இங்கு தெரிவிக்கின்றேன்.

உப்புல் திஸாநாயக்க,
தலைவர்,
அப்புத்தளை நகர சபை.

அப்புத்தளை நகர சபை அலுவலகம்,
அப்புத்தளை.

11-80

## நானாவித அறிவித்தல்கள்

### அக்குரெஸ்ஸ பிரதேச சபை

வரிமதிப்பு வரி அறவிடல்-2014

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 146 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் அக்குரெஸ்ஸ பிரதேச சபையினால் 2013.08.23 ஆந் திகதி நடத்தப்பட்ட பொது சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 06.01 (vii) இன் கீழ், கீழே காட்டப்பட்டுள்ள கருத்துக்களை ஏகமனதாக சபை ஏற்றுக்கொண்டதென இத்தால் மூலம் பொது மக்களுக்கு அறிவிக்கின்றேன்.

ஐ. டி. இதுனில் ஜயவீர,
தலைவர்,
அக்குரெஸ்ஸ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அக்குரெஸ்ஸ.
2013, செத்தெம்பர் மாதம் 30.

### *தீர்மானங்கள்*

*(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 146 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு அக்குரெஸ்ஸ பிரதேச சபையில் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களாக விளம்பரப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள அனைத்து நிரந்தர வதிவுச் சொத்துக்களிலிருந்தும் 2013 ஆம் வருடத்திற்கு அறவிடப்பட்ட வரிப் பெறுமதியை 2014 ஆம் வருடத்திற்கும் விதித்து அறவிட சபை ஏற்றுக்கொண்டுள்ளது.*

*(ஆ) 134 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின்படி வழங்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு அக்குரஸ்ஸ பிரதேச சபையில் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களாக விளம்பரப்படுத்தப்பட்ட பிரதேசத்தினுள் அமைந்துள்ள அனைத்து நிரந்தர வதிவுச் சொத்துக்களிலிருந்தும் வருடாந்த பெறுமதியில் நூற்றுக்கு எட்டு வீத (8%) வரிமதிப்பு வரியை 2014 ஆம் வருடத்திற்கு விதித்து அறவிடப்பட சபை ஏற்றுக்கொண்டுள்ளது.*

*(இ) 134 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு வருடாந்த வரியை ஒழுங்குமுறைப்படி 2014, மாச்சு மாதம் 31, யூன் மாதம் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய தினங்களிலோ அல்லது அதற்கு முன்னரோ சமமான நான்கு தவணைகளாக அக்குரஸ்ஸ பிரதேச சபைக்கு கட்டி முடிக்க வேண்டும் என அக்குரஸ்ஸ பிரதேச சபை தீர்மானித்துள்ளது.*

*11-133/1*

---

### அக்குரெஸ்ஸ பிரதேச சபை

*உத்தரவுப்பத்திர வரி அறவிடல்-2014*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 149 ஆம் பிரிவுடன் வாசிக்கப்படும் மேற்குறித்த சட்டத்தின் 147 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் (ஆ) பந்தியின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அக்குரெஸ்ஸ பிரதேச சபையினால் 2013.08.23 ஆந் திகதி நடத்தப்பட்ட பொது சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 06.01 (viii) இன் கீழ், கீழே காட்டப்பட்டுள்ள கருத்துக்களை ஏகமனதாக சபை ஏற்றுக்கொண்டதென இத்தால் பொது மக்களுக்கு அறிவிக்கின்றேன்.*

*ஐ. டி. இதுனில் ஜயவீர,*
*தலைவர்,*
*அக்குரெஸ்ஸ பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*அக்குரெஸ்ஸ.*
*2013, செத்தெம்பர் மாதம் 30.*

### *தீர்மானம்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 149 ஆம் பிரிவுடன் வாசிக்கப்படும் மேற்குறித்த சட்டத்தின் 147 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் (ஆ) பந்தியின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அக்குரெஸ்ஸ பிரதேச சபையின் வலுப் பிரதேசத்தின் ஆதிக்கத்தின் கீழ், கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வியாபாரங்கள் தொடர்பாக I ஆம் நிரலில் குறித்த வியாபாரங்களுக்கு II ஆம் நிரலில் குறித்த தொகையை வருடாந்த வரி மதிப்பீட்டிற்கிணங்க வியாபார உரிமைப்பத்திரக் கட்டணமாக 2014 ஆம் வருடம் தொடர்பாக அறவிடப்பட வேண்டுமென அக்குரெஸ்ஸ பிரதேச சபை தீர்மானித்துள்ளது.*

### *அட்டவணை*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 149 ஆவது பிரிவின் கீழ் வியாபார உத்தரவுப்பத்திரக் கட்டணங்கள்*

| | நிரல் I<br>வியாபார வகைகள் | நிரல் II<br>வருடத்துக்குரிய விதிக்கப்பட்ட வியாபார உரிமைக் கட்டணம் | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 750 க்கு குறைந்த வருடாந்தப் பெறுமதி<br>ரூ. சதம் | ரூபா 750 இல் இருந்து 1,500 வரை வருடாந்த பெறுமதி<br>ரூ. சதம் | ரூபா 1,500 க்கு மேற்பட்ட வருடாந்தப் பெறுமதி<br>ரூ. சதம் |
| 1 | பேக்கரி நிலையமொன்றை வைததிருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 2 | சாப்பாட்டுக்கடையொன்று அல்லது போசணைசாலை ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |

| | நிரல் I<br>வியாபார வகைகள் | நிரல் II<br>வருடத்துக்குரிய விதிக்கப்பட்ட வியாபார உரிமைக் கட்டணம் | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 750 க்கு குறைந்த வருடாந்தப் பெறுமதி<br>ரூ. சதம் | ரூபா 750 இல் இருந்து 1,500 வரை வருடாந்த பெறுமதி<br>ரூ. சதம் | ரூபா 1,500 க்கு மேற்பட்ட வருடாந்தப் பெறுமதி<br>ரூ. சதம் |
| 3 | தேனீர் அல்லது கோப்பி கடையொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 4 | விடுதியொன்றை நடாத்துதல் | 500 0 | 850 0 | 1,000 0 |
| 5 | முடிவெட்டும் நிலையம் நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 6 | மரக்கரி /பழங்கள் விற்கும் நிலையமொன்றை நடாத்துதல் | 300 0 | 750 0 | 1,000 0 |
| 7 | இறைச்சி விற்பனை நிலையமொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 8 | சலவைத் தொழிலகம் அல்லது துணி அழுத்தும் நிலையம் | 350 0 | 500 0 | 750 0 |
| 9 | நடமாடும் கைத்தொழிலகம் நடத்தல் | 350 0 | 500 0 | 750 0 |
| 10 | குளிர்பானங்கள் உற்பத்தி செய்யும் கைத்தொழில் நிலையமொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 11 | தயிர் விற்பனை செய்யும் நிலையமொன்றை வைத்திருத்தல் | 500 0 | 600 0 | 800 0 |
| 12 | மாட்டு மந்தையொன்று வைத்திருத்தல் | 300 0 | 500 0 | 750 0 |
| 13 | ஹோட்டல் ஒன்று வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 14 | உல்லாச பிரயாண சபையில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஹோட்டல் ஒன்று அல்லது விடுதியொன்றை வைத்திருத்தல் | கடந்த வருட வருமானத்தில் 1% அறவிடல் | | |
| 15 | அருவருக்கத்தக்க ஆபத்தான வியாபாரங்கள் தொடர்பாக | 500 0 | 750 0 | 1,000 0 |

11-133/2

---

**அக்குரெஸ்ஸ பிரதேச சபை**

கைத்தொழில்களுக்கான வரி - 2014

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 150 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அக்குரெஸ்ஸ பிரதேச சபையினால் 2013.08.23 ஆந் திகதி நடத்தப்பட்ட பொது சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 06.01 (ix) இன் கீழ், கீழே காட்டப்பட்டுள்ள கருத்துக்களை ஏகமனதாக சபை ஏற்றுக்கொண்டதென இத்தால் பொது மக்களுக்கு அறிவிக்கின்றேன்.*

ஐ. டி. இதுனில் ஜயவீர,
தலைவர்,
அக்குரெஸ்ஸ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அக்குரெஸ்ஸ.
2013, செத்தெம்பர் மாதம் 30.

**தீர்மானங்கள்**

*1989 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 150 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம்,*

(அ) அக்குரெஸ்ஸ பிரதேச சபையின் வலுப் பிரதேசத்தினுள் 2014 ஆம் வருடம் நடாத்தப்படும் கீழே அட்டவணையின் நிரல் I, இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறான வியாபாரங்கள் தொடர்பாக அட்டவணையில் நிரல் II இன் படி ஒவ்வொரு வியாபாரத்துக்குமான கைத்தொழில் வரியை முன்னைய வருட வருமானத்திலிருந்து 2014 ஆம் வருடத்திற்கு விதிக்கப்பட்டு அறவிடப்படவும்,

(ஆ) 2013, வருடத்தின் திசெம்பர் மாதத்தின் 31 ஆந் திகதி வரை நடாத்தப்பட்டு வரும் கைத்தொழில் தொடர்பான வரியை 2014, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் கைத்தொழிலை நடத்துபவரினால் அக்குரெஸ்ஸ பிரதேச சபைக்கு வழங்கப்பட வேண்டுமென இதன் மூலம் அறியத்தருவதோடு,

(இ) 2014 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஏதாவது கைத்தொழிலுக்கான வரியை, கைத்தொழிலினை ஆரம்பித்து மூன்று மாதங்களுக்குள் கைத்தொழிலினை நடத்துபவரினால் அக்குரெஸ்ஸ பிரதேச சபைக்கு வழங்கப்பட வேண்டுமென இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

**அட்டவணை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 150 ஆவது பிரிவின் பிரகாரம் விதிக்கப்படும் கைத்தொழில்களுக்கான வரி

| | நிரல் I<br>வியாபார வகைகள் | நிரல் II<br>வருடத்துக்குரிய விதிக்கப்பட்ட வியாபார உரிமைக் கட்டணம் | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 750 க்கு குறைந்த வருடாந்தப் பெறுமதி<br>ரூ. சதம் | ரூபா 750 இல் இருந்து 1,500 வரை வருடாந்த பெறுமதி<br>ரூ. சதம் | ரூபா 1,501 க்கு மேற்பட்ட வருடாந்தப் பெறுமதி<br>ரூ. சதம் |
| 1 | ஆடை தைக்கும் நிலையம் ஒன்று வைத்திருத்தல் | 350 0 | 750 0 | 1,000 0 |
| 2 | அலுமினியம், பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 3 | தேயிலை /சரக்கு வகைகள் ஆகியன பெக்கட் பண்ணும் நிலையம் நடாத்தல் | 300 0 | 350 0 | 500 0 |
| 4 | மிதிவண்டி பழுதுபார்த்தல் நிலையம் ஒன்று வைத்திருத்தல் | 300 0 | 400 0 | 500 0 |
| 5 | அரிசி குற்றும் ஆலை ஒன்று வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 6 | மோட்டார் வாகனம் முச்சக்கரவண்டி பழுதுபார்க்கும் நிலையமொன்று வைத்திருத்தல் | 350 0 | 750 0 | 1,000 0 |
| 7 | சீமெந்து கற்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிலையமொன்று வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 8 | டயர், டியூப் பழுதுபார்க்கும் நிலையம் கொண்டு நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 9 | மின்சார இயந்திரங்கள் பழுதுபார்க்கும் நிலையம் கொண்டு நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 10 | ஒளிபரப்பு, தொலைபேசி இயந்திரம் பழுதுபார்க்கும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 11 | இரும்பு பட்டறையொன்று வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 12 | டிஜிட்டல் தொழில்நுட்பவியல் அச்சகமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 13 | தச்சு வேலைத்தளமொன்று நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 14 | குஷன் வேலைத்தளமொன்று நடத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 15 | கடிகாரங்கள் பழுதுபார்க்கும் நிலையமொன்று வைத்திருத்தல் | 300 0 | 450 0 | 1,000 0 |
| 16 | பீரலு, பூவெட்டும் நிலையமொன்று வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 17 | வாண வேடிக்கைப் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிலையம் நடத்தல் | 300 0 | 600 0 | 1,000 0 |
| 18 | ரப்பர் கைத்தொழில் நிலையமொன்று நடத்தல் | 300 0 | 600 0 | 1,000 0 |
| 19 | குளிர் அறைகள் குளிரூட்டிகள் பழுதுபார்க்கும் நிலையமொன்று நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 20 | விளக்குமாறு, கால் துடைப்பு, தும்பினாலான உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்தல் | 300 0 | 450 0 | 600 0 |
| 21 | மோட்டார் வாகனம் பழுதுபார்க்கும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 22 | தங்கம், வெள்ளி பூசும் நிலையம் நடத்தல் | 300 0 | 400 0 | 600 0 |
| 23 | மாணிக்கக் கற்கள் வெட்டும் ஒப்பமிடும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 24 | குளிரூட்டப்பட்ட மீன் விற்பனை நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 25 | யோகட் உற்பத்தி நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 26 | கோழிப்பண்ணை நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 27 | மரணச் சடங்கு சேவை நடாத்தும் நிலையம் நடாத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 28 | மையங்களை தயார் செய்யும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |

| | நிரல் I<br>வியாபார வகைகள் | நிரல் II<br>வருடத்துக்குரிய விதிக்கப்பட்ட வியாபார உரிமைக் கட்டணம் | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 750 க்கு குறைந்த வருடாந்தப் பெறுமதி<br>ரூ. சதம் | ரூபா 750 இல் இருந்து 1,500 வரை வருடாந்த பெறுமதி<br>ரூ. சதம் | ரூபா 1,501 க்கு மேற்பட்ட வருடாந்தப் பெறுமதி<br>ரூ. சதம் |
| 29 | ஐஸ்கிரீம் உற்பத்தி செய்யும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 30 | வாகனங்கள் சர்விஸ் பண்ணும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 31 | சுண்ணாம்புச் சூளை செய்தலும், களஞ்சியம் செய்தலுமான நிலையமொன்று வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 32 | கொப்பரா விற்பனை செய்யும் நிலையம் ஒன்று வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 33 | தேங்காய் எண்ணெய் ஆலை நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 34 | பற்சிகிச்சை மற்றும் பல் கட்டும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 35 | கற்குழி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 36 | கல் ஆலையொன்று நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 37 | வேல்டின் வேலைத் தளமொன்று நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 38 | விவசாய இரசாயனப் பொருட்கள் விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 39 | ஆசிட் வகைகள் உற்பத்தி செய்யும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 40 | பசளை விற்பனை நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 41 | பிளாஸ்டிக் பய்பர் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்று வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 42 | மர ஆலை நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |

11-133/3

---

## அக்குரெஸ்ஸ பிரதேச சபை

### வியாபாரங்கள் தொடர்பான வரி அறவிடுதல் - 2014

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 152 ஆம் சரத்தில் (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அக்குரெஸ்ஸ பிரதேச சபையினால் 2013.08.23 ஆந் திகதி நடத்தப்பட்ட பொது சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 06.01. (X) இன் கீழ், கீழே காட்டப்பட்டுள்ள கருத்துக்களை ஏகமனதாக சபை ஏற்றுக்கொண்டதென இத்தால் மூலம் பொது மக்களுக்கு அறிவிக்கின்றேன்.

ஐ. டி. இதுனில் ஜயவீர,
தலைவர்,
அக்குரெஸ்ஸ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அக்குரெஸ்ஸ.
2013, செத்தெம்பர் மாதம் 30.

### பிரேரணைகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைக் கட்டளைச் சட்டத்தின் 152 ஆவது பிரிவின் பிரகாரம் (அ) (1) ஆம் உப பிரிவின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், அக்குரெஸ்ஸ பிரதேச சபையின் வலுப் பிரதேசத்தினுள் இங்கு அட்டவணையின் II, இல் குறித்துரைக்கப்படும் ஏதாவது 2014 ஆம் வருடத்தில் நடத்தப்பட்டு வரும் அனைத்து நபரினாலும் 2013 ஆம் ஆண்டின் வருமானத்தின்படி அட்டணை I இன் படியான வருடாந்த வரியை, அட்டவணை II, இல் குறிப்பிடப்பட்ட வியாபாரங்கள் தொடர்பாக விதித்து அறவிடப்படவும்.

(ஆ) (3) ஆம் உப பிரிவின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் வரிக்கு உட்பட்ட அனைத்து நபரினாலும் குறித்த வரியை 2014, யூன் மாதம் 30 ந் திகதிக்கு முன்னர் அக்குரெஸ்ஸ பிரதேச சபைக்கு வழங்கப்பட வேண்டுமென இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

இந்த வியாபார வரியை 2014, யூன் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

தலைவர்,
அக்குரெஸ்ஸ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அக்குரெஸ்ஸ.
2013, ஓகத்து 27.

## I ஆவது அட்டவணை

| *I ஆம் நிரல்*<br>*வியாபாரத்தின் பெறுகைகள்* | *II ஆம் நிரல்*<br>*செலுத்தத்தக்க வரி*<br>*ரூபா* |
|---|---|
| (1) ரூ. 6,001 தொடக்கம் 12,000 வரை | 90 0 |
| (2) ரூ. 12,001 தொடக்கம் 18,750 வரை | 180 0 |
| (3) ரூ. 18,751 தொடக்கம் 75,000 வரை | 360 0 |
| (4) ரூ. 75,001 தொடக்கம் 1,00,000 வரை | 600 0 |
| (5) ரூ. 1,00,001 தொடக்கம் 1,25,000 வரை | 1,200 0 |
| (6) ரூ. 1,25,001 தொடக்கம் 1,50,000 வரை | 2,000 0 |
| (7) ரூ. 1,50,000 இற்கு மேற்பட்டபோது | 3,000 0 |

## II ஆவது அட்டவணை

(1) தைத்து முடிக்கப்பட்ட ஆடைகள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்.
(2) சாப்பு சாமான்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்.
(3) சப்பாத்துக்கள் விற்பனை செய்யும் வியாபாரம் நடத்துதல்.
(4) தொலைத்தொடர்பு நிலையம் ஒன்று நடத்துதல்
(5) படப்பிரதிகள் பெற்றுக்கொள்ளும் நிலையமொன்று நடத்துதல்.
(6) வர்ண இரசாயண அறை நடத்தல்.
(7) ஏற்றுமதிக்காக தேயிலை தொழிற்சாலை ஒன்று நடத்துதல்.
(8) தேயிலைக் கொழுந்துகளை களஞ்சியப்படுத்தும் நிலையமொன்று நடத்துதல்.
(9) கட்டிடப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்.
(10) உடற்பயிற்சி நிலையமொன்று நடத்துதல்.
(11) சாயம் பகிர்ந்தளிக்கும் நிலையமொன்று நடத்துதல்.
(12) தனியார் கல்வி நிலையம் ஒன்று நடத்துதல்.
(13) முன்பாடசாலை நிலையம் ஒன்று நடத்துதல்.
(14) கணினி மென்பொருள் அபிவிருத்தி நிலையம் ஒன்று நடத்துதல்.
(15) கணினி பயிற்சி நிலையம் நடத்தல்
(16) சோதிட சேவைகள் வழங்கும் நிலையம் நடத்தல்.
(17) சாரதி பயிற்சி நிறுவனம் நடத்தல்.
(18) சாடிகளில் வளர்க்கும் தாவர நிலையமொன்றை நடத்தல்.
(19) ஆயுர்வேத மருந்து விற்பனை நிலையம் நடத்தல்.
(20) ஆங்கில மருந்து விற்பனை நிலையம் நடத்தல்.
(21) தொலைபேசி சேவை வழங்கும் நிறுவனம் ஒன்று நடத்தல்.
(22) மேற்கத்திய மருந்து விற்பனை நிலையம் நடத்தல்.
(23) வைத்திய இரசாயன அறை நடத்தல்.
(24) மிருக வைத்திய நிலையம் நடத்தல்.
(25) நொத்தாரிசுகள், சட்டத்தரணிகள் சேவைவழங்கும் நிலையமொன்றை நடாத்துதல்.
(26) கணக்காய்வு மற்றும் கணக்காளர் சேவை நடத்தல்.
(27) வங்கியொன்று நடத்தல்.
(28) காப்புறுதி சேவை வழங்கும் நிறுவனம் ஒன்று நடாத்துதல்
(29) லீஸின் சேவை வழங்கும் நிலையமொன்று நடத்தல்
(30) நிலஅளவை சேவை வழங்கும் நிலையமொன்று நடத்தல்
(31) வீடமைப்புத் துறை நிர்மான சேவை வழங்கல்
(32) வாஸ்து சேவை வழங்கும் நிலையமொன்று நடத்தல்
(33) பொறியியல் சேவை வழங்கும் நிறுவனம் ஒன்று நடத்தல்.
(34) விஷேச வைத்திய சேவை நடத்தல்.
(35) தனியார் ஆஸ்பத்திரி ஒன்று நடத்துதல்.
(36) புடவை கைத்தொழில் நிலையமொன்று நடத்துதல்.
(37) தங்க ஆபரணம் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்.
(38) கணினி உதிரிப்பாகங்கள் வழங்கும் வியாபார நிலையம் ஒன்று நடத்துதல்.
(39) மர சாமான்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்.

(40) விளம்பரங்கள் செய்யும் நிலையமொன்று நடத்துதல்.
(41) விழாக்களுக்கான பொருட்களை குத்தகைக்கு விடும் நிலையமொன்று நடத்துதல்.
(42) மூக்குக் கண்ணாடிகள் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்.
(43) லொத்தர் சீட்டிழுப்பு நிலையமொன்று நடத்துதல்.
(44) மட்பாண்டங்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்.
(45) ஒட்டு பிடிக்கும் நிலையம் நடத்தல்.
(46) உப தபால் நிலையம் நடத்தல்.
(47) படங்கள் சட்டமிடும் நிலையமொன்று நடத்துதல்.
(48) இறப்பர் கருவா விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்.
(49) தொலைபேசி அறை ஒன்று நடத்தும் வியாபாரம்
(50) நடமாடும் தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்று நடத்துதல்.
(51) தொழில் முகாமை நிலையம் ஒன்று நடத்துதல்.
(52) அடகு பிடிக்கும் நிலையமொன்று நடத்துதல்.
(53) ஒளிப்பட நாடாக்கள் இணைந்த இருவெட்டுக்கள் விற்பனை செய்யும் அல்லது வாடகைககு விடும் நிலையமொன்று நடத்துதல்.
(54) காகிதாதிகள் அல்லது புத்தகங்கள் விற்பனை செய்யும் நிலையமொன்றை நடத்துதல்.
(55) மரப்பலகைகள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்.
(56) சில்லறை வியாபார நிலையமொன்று நடத்துதல்.
(57) சங்கீத பொருட்களை விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்.
(58) களஞ்சியமொன்று வாடகைக்கு விடும் நிலையமொன்று நடத்துதல்.
(59) மொத்த வியாபார களஞ்சியம் ஒன்று நடத்துதல்.
(60) மின்சார பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் நடத்துதல்.
(61) பிரசித்தி பெற்ற கம்பனிகளுக்கு பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் நடத்துதல்.
(62) பிரசித்தி பெற்ற கம்பனிகளுக்கு பொருட்கள் விளம்பரப்படுத்தும் நிலையம் நடத்துதல்.
(63) வாகனம் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்.
(64) மோட்டார் வாகனம் விற்பனை செய்வோர் நிலையமொன்று நடத்துதல்.
(65) முச்சக்கரவண்டி விற்பனை செய்வோர்.
(66) வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்.
(67) முச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்.
(68) உராய்வு நீக்கிகள் நிறப்பும் நிலையம் நடத்தல்.
(69) மதுபானங்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்.
(70) சினிமா நிலையமொன்று நடத்தல்.
(71) மணமகள் சிகை அலங்காரம் செய்யும் நிலையமொன்று நடத்துதல்.
(72) சாரதி பயிற்சி நிலையமொன்று நடத்தல்.
(73) மாணிக்கக் கற்கள் விற்பனை செய்வோர் மாணிக்கக் கற்கள் ஒப்பமிடுவோர்.
(74) வெளிநாட்டு தொழில் நிலையமொன்று நடத்துதல்.
(75) புட் சிடி நடத்தல்.
(76) தொலைபேசி முற்பண பற்று காட் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்.
(77) தேயிலை கைத்தொழில் நிலையம் நடத்தல்.
(78) இணையத்தள சேவை நடத்தல்.
(79) விசித்திர மீன்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்.
(80) சரக்குப் பொருட்கள் அரிசி, சீனி, பால்மா சில்லறைக்கு விற்கும் நிலையம் நடத்தல்.
(81) சரக்குப் பொருட்கள் அரிசி, சீனி, பால்மா மொத்தமாக விற்கும் நிலையம் நடத்தல்.
(82) யோகட் விற்பனை செய்யும் நிலையம் நடத்தல்.
(83) பசளை வியாபார நிலையம் நடத்தல்.
(84) ஐஸ் கிரீம் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிலையம் நடத்தல்.
(85) இனிப்புப் பண்டங்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிலையம் நடத்தல்.
(86) பழைய உலோகப் பொருட்கள் களஞ்சியப்படுத்தும் நிலையம் நடத்தல்.
(87) பல் பிடுங்கும், பல் நிறைக்கும் நிலையம் நடத்தல்.
(88) படரி சாஜ் பண்ணும் நிலையம் நடத்தல்.
(89) அச்சகம் நடத்தல்.
(90) கேஸ் களஞ்சியப்படுத்தும் நிலையம் நடத்தல்.

## அக்குரெஸ்ஸ பிரதேச சபை

*விளம்பரங்களுக்கான அறிவித்தல் /கட்புலனாகும் சூழல் வரி - 2014*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 221 (ஆ) மற்றும் 122-126 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி அக்குரெஸ்ஸ பிரதேச சபையினால் 2013.08.23 ஆந் திகதி நடத்தப்பட்ட பொது சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம 06.01 (xi) இன் கீழ், கீழே காட்டப்பட்டுள்ள கருத்துக்களை ஏகமனதாக சபை ஏற்றுக்கொண்டதென இத்தால் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றேன்.*

ஐ. டி. இதுனில் ஜயவீர,
தலைவர்,
அக்குரெஸ்ஸ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அக்குரெஸ்ஸ.
2013, செத்தெம்பர் 30.

### தீர்மானம்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 221 (ஆ) மற்றும் 122-126 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி 1988.08.23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற அதிவிஷேட வர்த்தமானியில் IV (அ) பிரிவில் கௌரவ முதலமைச்சர் அவர்களினால் வெளியிடப்பட்ட 2002.11.02 ஆந் திகதி 1261 இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்திய அக்குரெஸ்ஸ பிரதேச சபையினால் ஏற்றுக்கொண்ட இடையாப்பு 39 ஆம் பிரிவின் பிரகாரம் அக்குரெஸ்ஸ பிரதேச சபை எல்லைக்குள் விளம்பர அறிவித்தல்களுக்காக காட்சிப்படுத்தப்படும் (பெனர் உட்பட) அமைப்புகள் மற்றும் அறிவித்தல்களுக்காக கீழ்காணும் அட்டவணையில் குறித்திருக்கும் கட்டணம் 2014.01.01 ஆந் திகதி தொடக்கம் மீண்டும் திருத்தியமைக்கும் வரை அறவிடப்படும் என அக்குரெஸ்ஸ பிரதேச சபை தீர்மானித்துள்ளது.*

### அட்டவணை

| விளம்பர விபரங்கள் | அனுமதிப்பத்திரத்துக்கான கட்டணம் மாதாந்தம் ரூபா ச. |
|---|---|
| 1. ஏதாவது கட்டட அமைப்பில் அல்லது விளம்பரப் பலகையொன்றில் விளம்பரப்படுத்துவதற்காக | 75 0 |
| 2. யாராவது ஒருவரால் சுமந்து செல்லப்படுகின்ற/அல்லது பயணம் செய்யும் வாகனத்திற்கு பொருத்தப்பட்ட அறிவித்தல் ஒன்றிற்காக அல்லது நிலைதாங்கியொன்றில் பொருத்தப்பட்டு விளம்பரப்படுத்தும் விளம்பரம் ஒன்றிற்காக (சினிமா அறிவித்தல் ஒன்றைத்தவிர) | |
| (அ) சதுர அடி 6 க்கு அதிகரிக்காத அனைத்து சதுர அடிக்கும் | 25 0 |
| (ஆ) சதுர அடி 6 க்கு அதிகரித்த அனைத்து சதுர அடிக்கும் | 10 0 |
| 3. ஏதாவது தனியார் பொது வீடொன்றில் பொது கட்டடமொன்றின் சுவரில் மதிலொன்றில் பொது மக்களுக்கு காணக்கூடிய விதத்தில் வியாபார அறிவித்தல் ஒன்றை விளம்பரப்படுத்தவோ, காட்சியளிப்பதற்கோ, ஒரு சதுர அடிக்கு | 10 0 |

11-133/5

---

## அக்குரெஸ்ஸ பிரதேச சபை

*அபிவிருத்தி செய்யப்படாத காணிகளுக்கு கட்டணம் அறவிடுதல்-2014*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 153 ஆம் (1) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி அக்குரஸ்ஸ பிரதேச சபையினால் 2013.08.23 ஆந் திகதி நடத்தப்பட்ட பொது சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம 06.01. (xii) இன் கீழ், கீழே காட்டப்பட்டுள்ள கருத்துக்களை ஏகமனதாக சபை ஏற்றுக்கொண்டதென இத்தால் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றேன்.*

ஐ. டி. இதுனில் ஜயவீர,
தலைவர்,
அக்குரெஸ்ஸ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அக்குரெஸ்ஸ.
2013, செத்தெம்பர் 30.

### தீர்மானம்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைக் கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவுகளின் (1) ஆம் உட்பிரிவின் படி பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட உரித்தின்படி பிரதேச சபை வழுப் பிரதேசத்தில் அமைந்துள்ள கட்டிடங்கள் அமைப்புக்கள் நிரந்தரமற்றதாயின் அல்லது நாள்தோறும் விளைச்சல் செய்ய தகுதியுடைய காணியில் :*

*(அ) கட்டிடங்கள் ஏதும் அமைக்கப்படாதிருப்பின் மற்றும்*
*(ஆ) அந்த நிலப்பரப்பில் முறைப்படி அல்லது சரியான முறையில் விளைச்சல் செய்ய ஈடுபடுத்தப்படாதிருப்பின்*
*(இ) இக்காணிகளில் அமைக்கப்பட்ட கட்டிடங்களுக்கு உட்பட்ட நிலப்பரப்பளவினதும், அக்காணியின் விளைச்சலுக்கு உட்பட்ட நிலப்பரப்பினதும், முழு நிலப்பரப்பளவுக்கும் இடையில் விகிதாசாரம் 60% த்தை விட குறைவாயின்*

*அக்காணியை அபிவிருத்தி செய்யப்படாத காணியென கருத்திற்கொண்டு அவ்வாறு அபிவிருத்தி செய்யப்படாத காணிகளுக்கு 2014 ஆம் வருடத்திற்காக அக்காணியின் மூலதன காணிப் பெறுமதியில் நூற்றுக்கு (2%) வருடாந்த வரியாக அறவிடப்படவும், அதன் அபிவிருத்தி செய்யப்படாத காணிகளுக்கான வரியாக 2014 ஆம் வருடத்தின் ஏப்பிறல் 30 ஆந் திகதிக்கு முன் அக்குரெஸ்ஸ பிரதேச சபைக்கு வழங்கப்பட வேண்டுமெனவும், இத்தால் அறியத்தருகின்றேன்.*

*11-133/6*

---

### அக்குரெஸ்ஸ பிரதேச சபை

அருவருக்கத்தக்க மற்றும் ஆபத்தான வியாபாரங்களை விளம்பரப்படுத்தல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி அக்குரஸ்ஸ பிரதேச சபையினால் 2013.08.23 ஆந் திகதி நடத்தப்பட்ட பொது சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 06.01.* (xiii) *இன் கீழ், கீழே காட்டப்பட்டுள்ள கருத்துக்களை ஏகமனதாக சபை ஏற்றுக்கொண்டதென இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றேன்.*

*ஐ. டி. இதுனில் ஜயவீர,*
*தலைவர்,*
*அக்குரெஸ்ஸ பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*அக்குரெஸ்ஸ.*
*2013, செத்தெம்பர் 30.*

### தீர்மானம்

*அக்குரெஸ்ஸ பிரதேச சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் 1988, ஒகத்து 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற அதிவிஷேட வர்த்தமானப் பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்ட துணைவிதிகளில் (21) ஆம் துணைவிதியின் முதலாம் பிரிவின் பிரகாரம் விளம்பரப்படுத்தப்படவுள்ள அருவருக்கத்தக்க மற்றும் ஆபத்தான வியாபாரங்கள் தொடர்பாக அட்டவணையை இத்துடன் முன்வைப்பதோடு, இவ்வட்டவணையில் குறிப்பிடப்பட்ட வியாபாரங்கள் அருவருக்கத்தக்க மற்றும் ஆபத்தான வியாபாரங்களாக ஏற்றுக்கொள்ள தகுதியுள்ளதென சபை தீர்மானித்துள்ளது.*

*(1) குளிரூட்டப்பட்ட மீன் விற்பனை செய்யும் நிலையம் நடத்தல்*
*(2) யோகட் உற்பத்தி நிலையம் ஒன்று வைத்திருத்தல்*
*(3) கோழிப்பண்ணை ஒன்று வைத்திருத்தல்*
*(4) மலர்ச்சாலை சேவை வழங்கும் நிலையம் நடத்தல்*
*(5) மையச் சடங்குகள் தயாரிக்கும் நிலையம் நடத்தல்*
*(6) ஐஸ் கிரீம் உற்பத்தி செய்யும் நிலையம் வைத்திருத்தல்*
*(7) வாகனங்களை சேர்விஸ் பண்ணும் நிலையமொன்று வைத்திருத்தல்*
*(8) சுண்ணாம்பு சுடுதல் அல்லது சூளை ஒன்று களஞ்சியப்படுத்தல் நிலையமொன்று வைத்திருத்தல்*
*(9) கொப்பரா விற்பனை செய்யும் நிலையம் ஒன்று வைத்திருத்தல்*
*(10) தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் நிலையம் நடத்தல்*
*(11) பற்சிகிச்சை நிலையம் நடத்தல்*
*(12) கற்குழி ஒன்று வைத்திருத்தல்*
*(13) கல் ஆலை ஒன்று வைத்திருத்தல்*
*(14) வேல்டின் வேலை செய்யும் நிலையம் ஒன்று வைத்திருத்தல்*
*(15) விவசாய இரசாயன பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று வைத்திருத்தல்*
*(16) அசிட் வகை உற்பத்தி செய்யும் நிலையம் நடத்தல்*
*(17) வெடில்கள் விற்பனை செய்யும் நிலையம் நடத்தல்*
*(18) பசளைகள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்துதல்*
*(19) பைபர் வீதுறு சாமான்கள் உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்று வைத்திருத்தல்*
*(20) தங்கம் வெள்ளி உலோகப் பொருட்கள் பூசப்படும் இடம்*

*11-133/7*

## திக்குவெல்லை பிரதேச சபை

வரி அறவீடு செய்தல் - 2014

2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி திக்குவெல்லை பிரதேச சபையினால் நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இல. 6.1.5 (I) இன் கீழ், கீழே குறிப்பிடப்படும் பிரேரணைகள் யாவும் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டது என்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றது.

2014 ஆம் ஆண்டிற்காக அறவிடப்படவுள்ள வரிப்பணமானது மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய தினங்களில் முடிவடையும் மேலும் அனைத்து காலாண்டுகளுக்குள்ளும் சமனான நான்கு தவணைக் கொடுப்பனவுகளில் செலுத்த வேண்டும் என்பது அறியத்தரப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டிற்காக அறவிடப்படவுள்ள வரிப்பணமானது மொத்தமாக 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்தப்படுமானால் அந்த மொத்த வரிப்பணத்தொகையிலிருந்து நூற்றுக்கு பத்து (10%) வீத கழிவும், ஒவ்வொரு காலாண்டுக்கும் உரிய பணமானது அந்தந்தக் காலாண்டின் முதல் மாதத்தின் இறுதித்தினத்திற்கு முன்பாக பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்படுமானால் நூற்றுக்கு ஐந்து (5%) வீத கழிவும் வழங்கப்படும்.

கிறிசாலி முத்துகுமாரண,
தலைவர்,
திக்குவெல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
திக்குவெல்லை,
2013, ஒற்றோபர் 14.

### தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின்படி,

(அ) 146 ஆம் பிரிவின் படி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் திக்குவெல்லை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் முன்னேற்ற பிரதேசமாக அறிவிக்கப்பட்ட பிரதேசத்சதில் அமைந்துள்ள அனைத்து அசையா சொத்துக் களும், 2013 ஆம் ஆண்டு கௌரவ அமைச்சர் அனுமதித்த படி 2013 ஆம் ஆண்டின் வருடாந்தப் பெறுமதிகளையே 2014 ஆம் ஆண்டிற்கும் நடைமுறைப்படுத்தவும்,

(ஆ) 134 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் திக்குவெல்லை பிரதேச சபையின் அபிவிருத்தியடைந்த பிரதேசம் என அறிவிக்கப்பட்ட பிரதேசத்தினுள் அமைந்துள்ள அனைத்து நிலையான சொத்துக்களுக்கும் புதிய வருடாந்தப் பெறுமதியில் நூற்றுக்கு ஆறு (6%) வீதம் வரிப்பணம் அறவிடவும் மேலும்,

(இ) 134 ஆம் பிரிவின் (6) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அந்த வரிப்பணமானது 2014, மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 31 மற்றும் திசெம்பர் 31 ஆகிய தினங்களில் முடிவடையும் நான்கு காலாண்டுகளுக்குள், சமனான நான்கு தவணைகளில் செலுத்துவதற்கு கட்டளை இடவும் திக்குவெல்லை பிரதேச சபை உத்தேசித்திருக்கின்றது.

இன்னும் மேற்படி சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (7) ஆம் உப பிரிவின் பிரகாரம் வருட வரிப்பணமானது கீழ்க் குறிப்பிடப்படும் விதத்தில் முழுமையாக செலுத்தப்படும் சந்தர்ப்பத்தில் அதில் குறிப்பிட்ட கழிவு வீதம் வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(அ) 2014.01.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் முழு வருடத்திற்குமான வரிப்பணம் செலுத்தப்பட்டால் அத்தொகை யில் 10% கழிவும் ;

(ஆ) வரிப்பணமானது பகுதி பகுதியாக செலுத்தப்படும் போது ஒவ்வொரு காலாண்டினதும் முதலாம் மாதத்திற்குள் செலுத்தப்பட்டால், அவ்வாறு செலுத்தப்பட்ட தொகையிலிருந்து 5% கழிவும் வழங்கப்படும்.

11-135/1

---

## திக்குவெல்லை பிரதேச சபை

ஏக்கருக்கான வரி அறவீடு - 2014

2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி திக்குவெல்லை பிரதேச சபையினால் நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இல. 6.1.5 (III) இன் கீழ், கீழே குறிப்பிடப்படும் பிரேரணைகள் யாவும் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றது.

2014 ஆம் ஆண்டு ஏக்கருக்கான வரிப்பணமானது மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய தினங்களில் முடிவடையும் மேலும் அனைத்து காலாண்டுகளுக்குள்ளும் சமனான நான்கு தவணைக் கொடுப்பனவுகளில் செலுத்த வேண்டும் என்பது அறியத்தரப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டிற்காக அறவிடப்படவுள்ள வரிப்பணமானது மொத்தமாக 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்தப்படுமானால் அந்த மொத்த வரிப்பணத்தொகையிலிருந்து நூற்றுக்கு பத்து (10%) வீத கழிவும், ஒவ்வொரு காலாண்டுக்கும் உரிய பணமானது அந்தந்தக் காலாண்டின்

முதல் மாதத்தின் இறுதித்தினத்திற்கு முன்பாக பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்படுமானால் நூற்றுக்கு ஐந்து (5%) வீத கழிவும் வழங்கப்படும்.

கிறிசாலி முத்துகுமாரன,
தலைவர்,
திக்குவெல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
திக்குவெல்லை,
2013, ஒற்றோபர் 14.

### தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின்படி

(அ) 146 ஆம் பிரிவின் படி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் திக்குவெல்லை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள ஏக்கருக்கான வரிக்குக் கட்டுப்பட்டுள்ள அனைத்து இடங்களுக்கும், 2013 ஆம் ஆண்டின் வருடாந்தப் பெறுமதிகளையே 2014 ஆம் ஆண்டிற்கும் நடைமுறைப்படுத்தவும்.

(ஆ) 134 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அதன் முதலாம் கட்டளைச் சட்டத்தின் கீழ் 1989.03.10 ஆந் திகதி வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டபடி ஏக்கருக்கான வரியை நியமிக்கும், அறவிடும் பணிக்காக உள்ளூராட்சி அமைச்சரால் அறிவிக்கப்பட்ட பிரதேசத்தினுள் அமைந்துள்ள காணியானது 5 ஹெக்டயருக்குக் குறைவாயினும் 1 ஹெக்டயருக்குக் குறைவாக இல்லாத சந்தர்ப்பத்தில் ஏக்கருக்கான வரியானது ரூபா 50 ஆகவும் காணியானது 5 ஹெக்டயர் அல்லது அதை விட அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் ஏக்கருக்கான வரியானது ஒவ்வொரு ஹெக்டயருக்கும் ரூபா 10 ஆகவும் 2014 இல் அறவிடப்பட வேண்டும்.

(இ) 134 ஆம் பிரிவின் (6) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அந்த வரிப்பணமானது 2014, மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 31 மற்றும் திசெம்பர் 31 ஆகிய தினங்களில் முடிவடையும் நான்கு காலாண்டுகளுக்குள், சமனான நான்கு தவணைகளில் செலுத்துவதற்கு இந்த வரிக்குக் கட்டுப்பட்டுள்ள அனைவருக்கும் கட்டளை இடவும் திக்குவெல்லை பிரதேச சபை உத்தேசித்திருக்கின்றது.

இன்னும் மேற்படி சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (7) ஆம் உப பிரிவின் பிரகாரம் வருட வரிப்பணமானது கீழ்க் குறிப்பிடப்படும் விதத்தில் முழுமையாக செலுத்தப்படும் சந்தர்ப்பத்தில் அதில் குறிப்பிட்ட கழிவு வீதம் வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் :-

(அ) 2014.01.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் முழு வருடத்திற்குமான ஏக்கர் வரி செலுத்தப்பட்டால் அத்தொகையில் 10% கழிவும் ;

(ஆ) வரிப்பணமானது பகுதி பகுதியாக செலுத்தப்படும் போது ஒவ்வொரு காலாண்டினதும் முதலாம் மாதத்திற்குள் செலுத்தப்பட்டால், அவ்வாறு செலுத்தப்பட்ட தொகையிலிருந்து 5% கழிவும் வழங்கப்படும்.

11-135/2

---

### திக்குவெல்லை பிரதேச சபை

காணி விற்பனை மீதான வரி அறவீடு - 2014

திக்குவெல்லை பிரதேச சபையினால் 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இல. 6.1.5 (II) இன் கீழ், கீழ் குறிப்பிடப்படும் பிரேரணைகள் யாவும் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கிறிசாலி முத்துகுமாரன,
தலைவர்,
திக்குவெல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்.
திக்குவெல்லை,
2013, ஒற்றோபர் 14.

### தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின்படி,

154 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திக்குவெல்லை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஏதேனும் காணி விற்பனை ஒன்று ஏலவிற்பனையாளர்/ அவரின் வேலையாட்கள் மூலம்/ உதவி அங்கத்தவர் மூலம், பகிரங்க ஏல விற்பனையில்/ விற்பனை செய்யப்படும்போது அந்த விற்பனை மூலம் பெறப்படும் பணத்தில் 1% வரியொன்று விற்பனையாளர்/ஏலவிற்பனையாளர்/தரகர்/அவரின் வேலையாட்கள்/அவரின் உதவி அங்கத்தவர் மூலம் பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும்.

154 (2) (1) ஆம் பிரிவின் பிரகாரம் இவ் வரியானது நியமித்து 14 நாளைக்குள் செலுத்தப்படவில்லையாயின், தட்டிக் கழித்தார் என்ற குற்றச்சாட்டிற்காக பிரதேச சபை செயலாளரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட பின் வரியை அறவிட்டுக்கொள்ள வேண்டும் என்றும் பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

11-135/3

## திக்குவெல்லை பிரதேச சபை

*அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடல் - 2014*

*2013 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதி திக்குவெல்லை பிரதேச சபையினால் நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இல. 6.1.5 (IV) இன் கீழ், கீழ்க் குறிப்பிடப்படும் பிரேரணைகள் யாவும் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றது.*

*2014 ஆம் வருடத்திற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள மேற்படி அனுமதிப்பத்திரக் கட்டணமானது 2014 ஆம் ஆண்டு மாச்சு 31 ஆந் திகதிக்கு முன்னர் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்தி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் மேலும் இத்தால் அறியத்தருகின்றது.*

*கிறிசாலி முத்துகுமாரன,*
*தலைவர்,*
*திக்குவெல்லை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*திக்குவெல்லை,*
*2013, ஒற்றோபர் 14.*

### தீர்மானம்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 149 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அச்சொல்லப்பட்ட சட்டத்தின் 147 (1) ஆம் உப பிரிவின் (ஆ) பந்தியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் திக்குவெல்லை பிரதேச சபை அதிகார எல்லைக்குள், கீழ்குறிப்பிட்ட அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிட்ட ஏதாயினும் தொழிற் துறையொன்றை 2014 ஆம் வருடத்தில் நடாத்திச் செல்வதற்காக வழங்கப்படும் ஏதாயினும் அனுமதிப்பத்திரம் ஒன்றின் மேல் அந்தத் தொழிற்துறை நடாத்திச் செல்லப்படும் இடத்தின் வருடாந்தப் பெறுமதி II ஆம் நிரலில் குறிப்பிட்ட எல்லைகளுக்குள் நடைமுறைப்படுத்தப்பட்டால் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான அளவுகளிலான அனுமதிப்பத்திரக் கட்டணமானது நிர்ணயிக்கப்பட்டு அறவீடு செய்யப்படவேண்டும் எனவும்,*

*2013 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி நடைமுறையிலுள்ள தொழில் ஒன்று சம்பந்தமாக அனுமதிப்பத்திரக் கட்டணம் 2014 ஆம் வருடம் சனவரி 01 முதல் திசெம்பர் 31 வரையில் செல்லுபடியாகும் படி 2014, மாச்சு 31 ஆந் திகதிக்கு முன் தொழிற்துறை நடாத்திச் செல்லும் நபர் மூலம் பிரதேச சபைக்கு கட்டணத்தைச் செலுத்தி அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென கட்டளை பிறப்பிக்கவும் திக்குவெல்லை பிரதேச சபை உத்தேசித்துள்ளது.*

### அட்டவணை

| | நிரல் I | நிரல் II இடத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| | தொழில்கள் | ரூபா 750 வரை | ரூ. 750 முதல் ரூ. 1,500 வரை | ரூ. 1,500 க்கு மேல் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 1. | சுற்றுலா வியாபாரிகள் மூலம் உணவுப்பொருட்கள் விற்பனை செய்யப்படுதல் | 250 0 | 300 0 | 500 0 |
| 2. | உணவுப் பண்டங்கள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 3. | தேனீர்/கோப்பி கடைகள் | 300 0 | 400 0 | 500 0 |
| 4. | வெதுப்பகம் | 300 0 | 500 0 | 750 0 |
| 5. | மிருக வளர்ப்புப் பண்ணை | 300 0 | 750 0 | 1,000 0 |
| 6. | கருங்கல் ஆலை | 600 0 | 800 0 | 1,000 0 |
| 7. | கருங்கல் உடைத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 8. | இயந்திர தளபாட உற்பத்திசாலை | 600 0 | 800 0 | 1,000 0 |
| 9. | தும்பு ஆலை | 600 0 | 800 0 | 1,000 0 |
| 10. | மிருக உணவு களஞ்சியப்படுத்தல் | 600 0 | 800 0 | 1,000 0 |
| 11. | முடிதிருத்தும் கடை | 300 0 | 500 0 | 700 0 |
| 12. | கறாஜ் ஒன்றை நடாத்திச் செல்லல் | 600 0 | 800 0 | 1,000 0 |
| 13. | மேற்கத்திய/சிங்கள மருந்து வகை விற்பனை | 600 0 | 750 0 | 1,000 0 |
| 14. | தேங்காய் எண்ணெய் ஆலை | 500 0 | 750 0 | 1,000 0 |

| நிரல் I | | நிரல் II இடத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| | தொழில்கள் | ரூபா 750 வரை | ரூ. 750 முதல் ரூ. 1,500 வரை | ரூ. 1,500 க்கு மேல் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 15. | எரிவாயு களஞ்சியப்படுத்தல், விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 16. | செங்கல் சூளை நடாத்திச் செல்லல் | 300 0 | 500 0 | 800 0 |
| 17. | கொல்லன் இரும்பு பட்டறை | 300 0 | 400 0 | 500 0 |
| 18. | இரும்பை உருக்காக மாற்றும் நிலையம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 19. | விவசாய இரசாயனப் பொருள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 20. | சினிமா அரங்கு ஒன்றை நடாத்துதல் | 600 0 | 800 0 | 1,000 0 |
| 21. | வாகனங்கள் சேவிஸ் செய்யும் இடம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 22. | விடுதி நிலையமொன்றை நடாத்துதல் | 600 0 | 800 0 | 1,000 0 |
| 23. | வள்ளங்கள் உற்பத்தி நிலையமொன்றை நடாத்துதல் | 600 0 | 800 0 | 1,000 0 |
| 24. | வெதுப்பக உணவுப் பொருட்கள் விற்பனை | 600 0 | 800 0 | 1,000 0 |
| 25. | காய்ச்சப்பட்ட தயிர் உற்பத்தி/விற்பனை | 600 0 | 800 0 | 1,000 0 |
| 26. | சீமெந்தினாலான பொருட்கள் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 27. | டின்கர் வேலைத் தளமொன்றை நடாத்துதல் | 600 0 | 800 0 | 1,000 0 |
| 28. | எரிபொருள் நிரப்பு நிலையமொன்றை நடாத்துதல் | 600 0 | 800 0 | 1,000 0 |
| 29. | மீன் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 30. | இறைச்சி விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 31. | மென்பான உற்பத்தி நிலையமொன்றை நடாத்துதல் | 600 0 | 800 0 | 1,000 0 |
| 32. | பாற்பண்ணை | 200 0 | 300 0 | 400 0 |
| 33. | பனிக்கட்டி உற்பத்தி நிலையம் | 600 0 | 800 0 | 1,000 0 |
| 34. | சோற்றுக்கடை/சிற்றுண்டிச்சாலை | 300 0 | 500 0 | 750 0 |
| 35. | ஹோட்டல்கள் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 36. | விடுதிச்சாலைகள் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 37. | சலவைக்கடை | 200 0 | 300 0 | 500 0 |
| 38. | மலர்ச்சாலை சேவை வழங்கல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 39. | பொதுச்சந்தை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 40. | முட்டை/இறைச்சிக்காக கோழிகளை வளர்த்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 41. | அரிசி ஆலை | 500 0 | 800 0 | 1,000 0 |
| 42. | உருக்கினாலான வீட்டுத்தளபாட உற்பத்திகள் | 600 0 | 750 0 | 1,000 0 |
| 43. | உலோக அரிப்பு வேலைத்தளம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 44. | அப்பளம், நூடில்ஸ் போன்ற உணவு உற்பத்தி | 500 0 | 750 0 | 1,000 0 |
| 45. | பலகார உற்பத்தி | 200 0 | 300 0 | 500 0 |
| 46. | மரமறுக்கும் ஆலை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 47. | டீசல், பெற்றோல் மண்ணெண்ணெய் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 48. | தளபாட உற்பத்தி | 500 0 | 600 0 | 1,000 0 |
| 49. | வேல்டின் வேலைத்தளம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 50. | பழுதடையக்கூடிய உணவுப்பொருள் விற்பனை | 200 0 | 400 0 | 600 0 |
| 51. | உணவுப்பொருட்களை சேமித்து விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 52. | முச்சக்கர வண்டி பழுதுபார்த்தல் | 500 0 | 700 0 | 1,000 0 |
| 53. | மீன் காய்ச்சுதல் | 500 0 | 700 0 | 1,000 0 |
| 54. | நீச்சல் தடாகம் (அடி 200, 300, 500) | 500 0 | 700 0 | 700 0 |

**கவனிக்கவும்.-**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் திக்குவெல்லை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஏதாவது ஒரு இடம் ஹோட்டலாக அல்லது சிற்றுண்டி சாலையாக அல்லது இருப்பிட நிலையமாகப் பயன்படுத்தப்படும்போது அவை 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி சட்டத்தின் கீழ் இலங்கை சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டிருந்தால், அந்த ஹோட்டலிலிருந்து அல்லது சிற்றுண்டிச்சாலையிலிருந்து அல்லது இருப்பிட நிலையத்திலிருந்து சென்ற வருடத்தில் கிடைத்த வருமானத்திலிருந்து நூற்றுக்கு ஒரு வீதம் 1% அளவுடையதான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை நியமித்து 2014 ஆம் ஆண்டிற்கு அறவிடவும்.

மேலும் இக்கட்டணத்தை அறவிட ஹோட்டல், சிற்றுண்டி சாலை, இருப்பிட நிலையத்தின் கடந்த ஆண்டின் வருமானம் பற்றிய விடயங்களை உரிமையாளர், முகாமையாளர் அல்லது கணக்காளர் அல்லது வேறு ஏதும் அதிகாரம் பெற்ற ஒருவரால் வருடா வருடம் திக்குவெல்லை பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

11-135/4

## திக்குவெல்லை பிரதேச சபை

தொழிற்றுறை மீதான அறவீடு - 2014

திக்குவெல்லை பிரதேச சபையினால் 2013 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இல. 6.1.5 (V) இன் கீழ், கீழ் குறப்பிடப்படும் பிரேரணைகள் யாவும் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகிறது.

2014 ஆம் ஆண்டிற்காக அமுல்படுத்தப்படும் தொழிற்துறை மீதான இவ்வரிக் கட்டணமானது மேற்படி வருடத்தின் மாச்சு 31 ஆந் திகதிக்கு முன்னர், பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்பட வேண்டுமெனவும் மேலும் இத்தால் அறியத்தருகின்றது.

கிறிசாலி முத்துகுமாரன,
தலைவர்,
திக்குவெல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
திக்குவெல்லை,
2013, ஒற்றோபர் 14.

### தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 150 ஆம் பிரிவின்கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம்,

(அ) திக்குவெல்லை பிரதேச சபை அதிகார எல்லைக்குள், 2014 ஆம் வருடத்தில் நடாத்திச் செல்லப்படும் இங்கு கீழே அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிட்ட ஏதாயினும் தொழிற் துறை, தொடர்பாக அந்தத் தொழிற்துறையை நடாத்திச் செல்லும் இடத்தின் வருடாந்தப் பெறுமதி அந்த அட்டவணையில் II ஆம் நிரலில் குறிப்பிட்ட எல்லைகளுக்குள் நடைமுறைப்படுத்தப்பட்டால் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான அளவுகளிலான 2014 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரக் கட்டணமானது நிர்ணயிக்கப்பட்டு அறவீடு செய்யப்படவேண்டும் எனவும்,

(ஆ) 2013 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி நடைபெற்ற தொழிற்துறை தொடர்பான மேற்குறிப்பிட்ட அனுமதிப்பத்திரக் கட்டணம் 2014, மாச்சு 31 ஆந் திகதிக்கு முன் தொழிலை நடாத்திச் செல்லும் நபர் மூலம் பிரதேச சபைக்கு கட்டணத்தைச் செலுத்தி அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென கட்டளை பிறப்பிக்கவும்,

(இ) 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஏதாயினும் ஒரு தொழிற்துறை ஒன்றுடன் தொடர்பானதாயின் மேற்குறிப்பிட்ட வரி தொழிற்துறை ஒன்று ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பம் முதல் தொழிலை நடாத்திச் செல்லும் நபர் மூலம் பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என கட்டளை பிறப்பிக்க உத்தேசித்திருக்கின்றது.

### அட்டவணை

| | நிரல் I | நிரல் II இடத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| | தொழில்கள் | ரூபா 750 வரை | ரூ. 750 முதல் ரூ. 1,500 வரை | ரூ. 1,500 க்கு மேல் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 1 | தையல் இயந்திரம் பழுதுபார்த்தல் | 300 0 | 400 0 | 500 0 |
| 2 | துவிச்சக்கரவண்டி பழுதுபார்க்கும் நிலையமொன்றை நடாத்திச் செல்லல் | 200 0 | 300 0 | 500 0 |
| 3 | கடிகாரம் பழுதுபார்த்தல் | 250 0 | 350 0 | 500 0 |
| 4 | புகைப்படங்கள் சட்டமிடும் நிலையமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 5 | டயர், டியூப் பழுதுபார்த்தல் களஞ்சியப்படுத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 6 | கணினி பழுதுபார்த்தல் | 300 0 | 400 0 | 500 0 |
| 7 | மின்சார உபகரணங்கள் பழுதுபார்த்தல் | 400 0 | 500 0 | 750 0 |
| 8 | வானொலி/தொலைக்காட்சிப் பெட்டி பழுதுபார்த்தல் | 400 0 | 500 0 | 750 0 |
| 9 | உலர் உணவு பொதி செய்தல் | 300 0 | 600 0 | 900 0 |

| | நிரல் I | நிரல் II இடத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| | தொழில்கள் | ரூபா 750 வரை | ரூ. 750 முதல் ரூ. 1,500 வரை | ரூ. 1,500 க்கு மேல் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 10 | கையடக்கத் தொலைபேசி பழுதுபார்க்கும் நிலையமொன்றை நடாத்திச்செல்லல் | 400 0 | 500 0 | 600 0 |
| 11 | அறிவித்தல் பலகை/பெயர்ப் பலகை தயாரிக்கும் நிலையமொன்றை நடாத்துதல் | 400 0 | 500 0 | 600 0 |
| 12 | சித்திர வேலைப்பாடுகளுடனான தளபாடங்களை தயாரிக்கும் நிலையமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 13 | தென்னை பராளை விற்பனை நிலையமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 14 | லொறியிற்கு போ(B)ட் அடித்தல் மற்றும் பழுதுபார்த்தல் | 100 0 | 200 0 | 300 0 |
| 15 | தையல் நிலையமொன்றை நடாத்திச் செல்லல் | | | |
| | (i) 1-5 குறையாத தையல் இயந்திரம் | 300 0 | 400 0 | 500 0 |
| | (ii) 5 க்கு கூடிய தையல் இயந்திரம் | 500 0 | 750 0 | 750 0 |
| 16 | குசன் வேலைத்தளம் | 250 0 | 500 0 | 1,000 0 |
| 17 | பாதணி விற்பனை மற்றும் உற்பத்தி | 500 0 | 750 0 | 1,000 0 |
| 18 | அச்சகம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500 0 | 750 0 | 1,000 0 |

11- 135/5

---

**திக்குவெல்லை பிரதேச சபை**

வியாபார வரி அறவீடு - 2014

திக்குவெல்லை பிரதேச சபையினால் 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இல. 6.1.5 (VI) இன் கீழ், கீழ் குறிப்பிடப்படும் பிரேரணைகள் யாவும் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றது.

2014 ஆம் ஆண்டிற்காக அமுல்படுத்தப்படும் வியாபார வரிக் கட்டணமானது மேற்படி வருடத்தின் மாச்சு 31 ஆந் திகதிக்கு முன்னர், பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்பட வேண்டுமெனவும் மேலும் இத்தால் அறியத்தருகின்றது.

கிறிசாலி முத்துகுமாரன,
தலைவர்,
திக்குவெல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
திக்குவெல்லை,
2013, ஒற்றோபர் 14.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 150 ஆம் பிரிவின்கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம்,

(அ) (1) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் திக்குவெல்லை பிரதேச சபை அதிகார எல்லைக்குள், இங்கு கீழே அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிட்ட ஏதாயினும் ஒரு வியாபாரம், 2014 ஆம் ஆண்டிலும் நடாத்திச் செல்லப்படும் இடத்து அந்த வியாபாரத்தை நடாத்திச் செல்லும் அனைத்து நபர்களிடமும் குறிப்பிட்ட வியாபாரத்திற்கு, அதற்கு முன்புள்ள வருடத்தின் கொடுப்பனவு இங்கு கீழ் துணைப்பதிவேட்டில் 1 ஆம் நிரலில் குறிப்பிட்ட ஏதேனும் வரையறைக்குள் கொண்டு நடத்தப்படுமிடத்து 2 ஆம் நிரலில் குறிப்பிட்டவாறான அளவுகளிலான வியாபார வரியை அறவிடவும்;

(ஆ) மேலும் (3) ஆவது உப பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி இவ் வரிக்கு கட்டுப்பட்டுள்ள எவராயினும் ஒருவர் மூலம் மேற்குறிப்பிட்ட வியாபார வரி 2014, மாச்சு 31 ஆந் திகதிக்கு முன்னர் திக்குவெல்லை பிரதேச சபைக்கு செலுத்த வேண்டுமென உத்தேசித்துள்ளது.

### *1 ஆம் பகுதி*

### *வியாபாரங்கள்*

இந்த வியாபார வரிக்கட்டணமானது கீழ்வரும் விடயங்களுக்கு ஏற்புடையதாகும் :

1. அடகு பிடிப்பவர்கள்.
2. வினியோகத்தர்கள்.
3. ஏலவிற்பனையாளர்கள்.
4. வங்கி மற்றும் காப்புறுதி முகவர்கள்.
5. தொழில் முகவர் நிறுவனத்தினர்.
6. குதிரைப் பந்தயக்காரர்கள்.
7. தனியார்/பிரத்தியேக வகுப்புக்களை நடாத்துதல்.
8. கொந்தராத்துக்காரர்கள்/தரகர்கள்.
9. சாரதிப் பயிற்றுநர் பயிற்சி நிலையங்கள்.
10. வெளிநாட்டு சாராய, மதுபான கடை நடாத்துவோர்.
11. நெசவாளை ஆடை தயாரிக்கும் தொழிற்சாலைகள்.
12. கொமிஷன் முகவர்கள்.
13. தரகர்கள்.
14. கடன் வழங்குநர்கள்.
15. பிரயாண முகவர்கள்.
16. நொத்தாரிஸ்மார்கள்.
17. நிதி முதலீட்டாளர்கள்.
18. காப்புறுதி முகவர்கள்.
19. வாகன விற்பனையாளர்கள்.
20. தொலைபேசி கோபுரமொன்றை நடாத்துதல்.
21. பழைய உலோகப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தல்.
22. பூஜைப் பொருட்கள் விற்பனை.
23. மாணிக்க வியாபாரம்.
24. பாவனைப் பொருட்கள் விற்பனை.
25. தோற்பைகள், நுளம்பு வலை விற்பனை.
26. சீமெந்து விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்.
27. தையல் இயந்திர விற்பனை.
28. அலுமினிய, பிளாஸ்டிக் பொருள் விற்பனை.
29. பத்திரிகை/புத்தக/பாடசாலை உபகரணங்கள் விற்பனை.
30. உற்சவ பொருட்கள் வாடகைக்கு விடல்.
31. வெற்றிலை, பாக்கு விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்.
32. புடவைக் கடை நடாத்துதல்.
33. விளையாட்டுப் பொருட்கள் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்.
34. மின்சார உபகரண விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்.
35. மிதி வண்டி விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்.
36. கண்ணாடி விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்.
37. டயர், டியூப் களஞ்சியப்படுத்தல்.
38. பூச்சு வகை விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்.
39. கொப்பரா கொள்வனவு செய்யும் இடம்.
40. லொத்தர் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்.
41. மட்பாண்ட பொருள் விற்பனை.
42. இயந்திர உராய்வு எண்ணெய் விற்பனை.
43. டைல்கள் விற்பனை.
44. பித்தளைப் பொருட்கள் விற்பனை.
45. பிரத்தியேக வியாபார நிலையமொன்றை நடாத்துதல்.
46. பணமீட்டும் பாலர் பாடசாலை.
47. மோட்டார் வண்டி விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்.
48. வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை.
49. பிரத்தியேக தொலைபேசி சேவை, புகைப்பட பிரதி.
50. இரும்புப் பொருள், கட்டிடப் பொருள் விற்பனை.

51. மீன்பிடி உபகரண விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்.
52. பாடசாலை/எழுதுகருவிகள் விற்பனை.
53. மண், செங்கல் விற்பனை.
54. மரப்பலகை விற்பனை.
55. பழவகை விற்பனை.
56. மரக்கறி விற்பனை.
57. வீட்டுத்தளபாடங்கள் விற்பனை.
58. ஓடு இரும்பு சீமெந்து களஞ்சியப்படுத்தல்.
59. வைத்திய மத்திய நிலையம்.
60. கணனி பாடநெறிகளை நடாத்துதல்.
61. மரப்பலகை களஞ்சியப்படுத்தும் நிலையமொன்றை நடாத்துதல்.
62. டீசல் பொம்பை பழுதுபார்த்தல்.
63. பாடல்கள் பதிவு செய்தலும், வீடியோ நாடாக்களை வாடகைக்கு வழங்குதலும்.
64. பாதணி உற்பத்தியும் விற்பனையும்.
65. உணவுப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தி விற்பனை செய்தல்.
66. வாழைக்குலை விற்பனை.
67. மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்.
68. மின்சார உபகரண உதிரிப்பாகங்கள் விற்பனை.
69. ஆயுர்வேத வைத்திய நிலையம்.

**2 ஆம் பகுதி**

| I ஆவது நிரல்<br>2013 ஆம் வருட வியாபாரத்தின் வருமானம் | II ஆவது நிரல்<br>ரூபா ச. |
|---|---|
| 01. ரூபா 6000 இற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | எதுவும் இல்லை |
| 02. ரூபா 6,000 இற்கு மேலாகவும் ரூபா 12,000 இற்கு குறைவாகவும் உள்ள சந்தர்ப்பத்தில் | 90 0 |
| 03. ரூபா 12,000 இற்கு மேலாகவும் ரூபா 18,750 இற்கு குறைவாகவும் உள்ள சந்தர்ப்பத்தில் | 180 0 |
| 04. ரூபா 18,750 இற்கு மேலாகவும் ரூபா 75,000 இற்கு குறைவாகவும் உள்ள சந்தர்ப்பத்தில் | 360 0 |
| 05. ரூபா 75,000 இற்கு மேலாகவும் ரூபா 1,50,000 இற்கு குறைவாகவும் உள்ள சந்தர்ப்பத்தில் | 1,200 0 |
| 06. ரூபா 1,50,000 இற்கு மேலாக உள்ள சந்தர்ப்பத்தில் | 3,000 0 |

பல்வேறு உணவுப் பொருட்கள் களஞ்சியப்படுத்தி விற்பனை செய்யும் அதிகுளிரூட்டியின் ஒரு கன அடிக்கு ரூபா 500 வீதம் பணம் செலுத்த வேண்டும்.

மீன், இறைச்சி வகை விற்பனை செய்யும் அதிகுளிரூட்டியின் ஒரு கன அடிக்கு ரூபா 250 வீதம் பணம் செலுத்த வேண்டும்.

11- 135/6

---

**திக்குவெல்லை பிரதேச சபை**

அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீதான வரி அறவீடு - 2014

திக்குவெல்லை பிரதேச சபை மூலம் 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 6.1.5 (VII) இன் கீழ், கீழ் குறிப்பிடப்படும் பிரேரணைகள் யாவும் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டது என்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றது.

2014 ஆம் ஆண்டிற்காக அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீதான வரிக் கட்டணமானது மேற்படி வருடத்தின் மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர், பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்பட வேண்டும் எனவும் மேலும் இத்தால் அறியத்தரப்படுகின்றது.

கிறிசாலி முத்துகுமாரன,
தலைவர்,
திக்குவெல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
திக்குவெல்லை,
2013, ஒற்றோபர் 14.

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 153 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ், பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், திக்குவெல்லை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு அல்லது நிரந்தர அல்லது தொடர்ச்சியாக நெற்செய்கை செய்வதற்கு உசிதமான காணியில்,*

(அ) *கட்டிடங்கள் ஏதும் நிர்மாணிக்கப்படாதிருப்பின் அல்லது*

(ஆ) *அந்தக் காணியை உரிய முறையில் அல்லது நிரந்தரமாகவோ நெற்செய்கைக்கு உட்படுத்தப்படாத சந்தர்ப்பத்தில்*

(இ) *அந்தக் காணியில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டிடங்களினால், தரையில் உண்மையாகவே மூடப்பட்டிருக்கும் நிலப்பரப்பு, மொத்தக் காணியின் 2/3 இற்கு சமனாக இல்லாத சந்தர்ப்பத்தில், காணியின் மொத்த நிலப்பரப்பானது குறைவாயின்*

*மேற்குறிப்பிட்ட காணியை அபிவிருத்தி செய்யப்படாத காணியாகக் கருதவும். அவ்வாறு அபிவிருத்தி செய்யப்படாத காணியாகக் கருதப்பட்ட காணிகள் மீது 2014 ஆம் வருடத்திற்காக அந்த ஒவ்வொரு காணியின் மூலதனப் பெறுமதியில் 2% வருடாந்த வரியொன்று நிர்ணயிப்பதற்கும், குறிப்பிட்ட அபிவிருத்தி செய்யப்படாத காணி மீது 2014, மாச்சு 31 ஆந் திகதிக்கு முன்னர் திக்குவெல்லை பிரதேச சபைக்கு செலுத்த வேண்டுமென கட்டளை பிறப்பிக்க வேண்டுமென உத்தேசித்துள்ளது.*

*11-135/7*

---

**திக்குவெல்லை பிரதேச சபை**

*களியாட்ட வரிக் கட்டளைச் சட்டம், பகிரங்க நாடக அரங்கேற்ற கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் வரி அறவீடு செய்தல் - 2014*

*திக்குவெல்லை பிரதேச சபை மூலம் 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 6.1.5 (IX) இன் கீழ், கீழ் குறிப்பிடப்படும் பிரேரணைகள் யாவும் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டது என்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

*கிறிசாலி முத்துகுமாரன,*
*தலைவர்,*
*திக்குவெல்லை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*திக்குவெல்லை,*
*2013, ஒற்றோபர் 14.*

**தீர்மானம்**

***களியாட்ட வரிக் கட்டளைச் சட்டம், பகிரங்க நாடக அரங்கேற்ற கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் வரி அறவீடு செய்தல் - 2014***

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 150 ஆம் பிரிவின் கீழ், பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம்,*

*களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் திக்குவெல்லை பிரதேச சபை அதிகார எல்லைக்குள், அமைந்த பிரதேசத்தில் நடாத்தப்படும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தில் விளக்கப்பட்ட ஏதேனும் களியாட்டமொன்றைப் பார்ப்பதற்காக நுழையும்போது செலுத்தப்படும் கட்டணத்தில் 20% இற்கு சமனான வரியொன்று நிர்ணயிக்கப்பட்டு அறவீடு செய்யப்பட வேண்டுமென பிரதேச சபை உத்தேசித்துள்ளது. இன்னும் விகாரை ஒன்றின் சமய அனுஷ்டானங்கள் அல்லது பாடசாலை ஒன்றின் வாசிகசாலை அல்லது அபிவிருத்தி வேலையொன்றின் நிமித்தம் காட்சிப்படுத்தப்படும் காட்சி ஏற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகளின் பேரில் நாடக அரங்கேற்ற கட்டளைச் சட்டத்தின் அனுமதிப்படி களியாட்ட வரியிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென உத்தேசித்துள்ளது.*

*அதே போல் சினிமா கொட்டகைகளின் மூலம் அறவிடப்படும் களியாட்ட வரி, கௌரவ அமைச்சர் அனுமதித்த படி 7.5% அளவில் இருக்க வேண்டும் எனவும் உத்தேசித்துள்ளது.*

*11-135/8*

## திக்குவெல்லை பிரதேச சபை

வாகனங்கள், மிருகங்கள் மீதான வரி அறவீடு – 2014

திக்குவெல்லை பிரதேச சபை மூலம் 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 6.1.5 (XII) இன் கீழ், கீழே குறிப்பிடப்படும் பிரேரணைகள் யாவும் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டன என்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றது.

இதன் பிரகாரம் திக்குவெல்லை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் மேற்படி வரிக்கு உட்படும் ஏதேனும் வாகனமொன்றையோ, மிருகமொன்றையோ வைத்திருக்கும் அனைத்து நபர் மூலமும் குறிப்பிட்ட அந்த வாகனம் அல்லது அந்த மிருகம் தம் வசம் இருக்கின்ற தினங்கள் முப்பது நாட்கள் நிறைவடைந்துவிட்டால் உடனே 2014 ஆம் ஆண்டிற்கான மேற்படி வரியை, திக்குவெல்லை பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்பட வேண்டும் எனவும் மேலும் இத்தால் அறியத்தருகின்றது.

கிறிசாலி முத்துகுமாரன,<br>
தலைவர்,<br>
திக்குவெல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,<br>
திக்குவெல்லை,<br>
2013, ஒற்றோபர் 14.

### தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 147 ஆம் பிரிவுடன் சொல்லப்படவேண்டிய அந்த சட்டத்தின் அந்தக் கட்டளையின் 148 ஆம் பிரிவின் நான்காம் துணைப்பதிவேட்டின் விதிமுறைகளின் கீழ், பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் திக்குவெல்லை பிரதேச சபை அதிகார எல்லைக்குள், 2014 ஆம் ஆண்டிற்காக கீழே அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிட்ட ஏதாயினும் வாகனமொன்றையோ, மிருகமொன்றையோ தம் வசம் வைத்திருக்கும் அனைத்து நபர்கள் மீதும் இங்கு முறையே II ஆம் நிரலில் குறிப்பிட்ட வரியொன்று 2014 ஆம் ஆண்டிற்கான நிர்ணயிக்கப்பட்டு அறவீடு செய்யவும், குறிப்பிட்ட அனுமதிப்பத்திரத்தை 2014 ஆம் வருடம் மாச்சு 31 ஆந் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனவும் உத்தேசித்திருக்கின்றது.

### அட்டவணை

| | | ரூபா ச. |
|---|---|---|
| 1. | மோட்டார் வாகனமொன்று, மோட்டார் காரொன்று, மோட்டார் லொறியொன்று, மோட்டார் சைக்கிளொன்று, மாட்டுவண்டியொன்று, ரிக்ஷோவொன்று, பைசிக்களொன்று அல்லது றைசிக்கிள் அல்லாத அனைத்து வாகனங்களுக்கும் | 25 0 |
| 2. | அனைத்து பைசிக்கிள்கள், றைசிக்கிள்கள், பைசிக்கிள் காரொன்று அல்லது மாட்டுவண்டிகள் | |
| | (அ) வியாபார நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுமானால் | 18 0 |
| | (ஆ) வியாபார நோக்கத்திற்கல்லாமல் பயன்படுத்தப்படுமானால் | 4 0 |
| | எல்லா வகை மாட்டு வண்டிகளுக்கும் | 20 0 |
| | எல்லா வகை கைத்தள்ளு வண்டிகளுக்கும் | 10 0 |
| | எல்லா வகை ரிக்ஷோகளுக்கும் | 07 0 |
| | எல்லா வகை குதிரைகள், கோவேறு கழுதைகள் | 15 0 |
| | எல்லா வகை யானைகள் | 50 0 |
| 3. | கூலி வாகனங்களுக்கு (ஒரு மாதத்திற்கு) | 200 0 |

26 அங்குல விட்டத்தை விடவும் குறைந்த சில்லுடைய சிறுவர் வாகனம், வீல்பெரோ பெரும்பாலும் தனியாரிடத்தில் மாத்திரம் வியாபார நோக்கம் கருதி பயன்படுத்தப்படும் கைத்தள்ளு வண்டிகள், வியாபார நோக்கம் கருதி பயன்படுத்தப்படாத கைதள்ளு வண்டிகள் இத்தகைய வரி அறவீட்டிலிருந்து விடுவிக்கப்படுகின்றது.

இந்த துணைப்பதிவேட்டில் “வியாபார நடவடிக்கை” என்பது விற்பனைக்காக வேறு வகையில் ஏதேனும் வியாபார அல்லது தொழில் நோக்கம் கருதி ஏதேனும் பொருட்கள், பண்டங்கள், எழுத்து மூல அல்லது அச்சடிக்கப்பட்ட பொருட்களைக் கொண்டு செல்வது உள்ளடங்களாகும்.

11-135/9

## திக்குவெல்லை பிரதேச சபை

*உற்சவ நிகழ்ச்சிகளின்போது வாகன தரிப்பிடங்கள் வாயிலாக கட்டணம் அறவீடு செய்தல் - 2014*

*திக்குவெல்லை பிரதேச சபையினால் 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 6.1.5 (XIII) இன் கீழ், கீழே குறிப்பிடப்படும் பிரேரணைகள் யாவும் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டன என்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

*கிறிசாலி முத்துகுமாரன,*
*தலைவர்,*
*திக்குவெல்லை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*திக்குவெல்லை,*
*2013, ஒற்றோபர் 14.*

### தீர்மானம்

| | வாகனங்களின் பெயர் | அறவிடப்படும் கட்டணம் ரூபா ச. |
|---|---|---|
| 1. | பஸ் வண்டி ஒன்றிற்காக | 100 0 |
| 2. | லொறி ஒன்றிற்காக | 100 0 |
| 3. | வேன் ஒன்றிற்காக | 50 0 |
| 4. | கை ட்ரக்டர் ஒன்றிற்காக | 50 0 |
| 5. | முச்சக்கர வண்டி ஒன்றிற்காக | 30 0 |
| 6. | மிதி வண்டி ஒன்றிற்காக | 20 0 |

*11-135/10*

---

## திக்குவெல்லை பிரதேச சபை

*சந்தைக் கட்டணம் அறவிடுதலும், காணிகளை குத்தகைக்கு விடுதலும் - 2014*

*திக்குவெல்லை பிரதேச சபையினால் 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 6.1.5 (XI) இன் கீழ், கீழே குறிப்பிடப்படும் பிரேரணைகள் யாவும் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டன என்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

*கிறிசாலி முத்துகுமாரன,*
*தலைவர்,*
*திக்குவெல்லை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*திக்குவெல்லை,*
*2013, ஒற்றோபர் 14.*

### தீர்மானம்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122 ஆம் பிரிவுடன், சொல்லப்பட்ட 126 (XII) ஆம் பிரிவுகளின் பிரகாரம் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட இடைக்கால சட்டத்தின் இரண்டாம் பிரிவின் கீழ், கௌரவ அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், தயாரிக்கப்பட்ட 1988.08.23 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டவாறு இடைக்காலச்சட்டம் 2008.09.23 ஆந் திகதி திக்குவெல்லை பிரதேச சபை வருடாந்த பொதுக் கூட்டத்தில் அங்கீகாரம் பெற்றதென்றும் அதில் குறிப்பிடப்பட்ட 33 ஆம் இடைக்காலச் சட்டத்தின் பிரகாரம் திக்குவெல்லை பிரதேச சபையின் பொதுச் சந்தையினால் கீழ் குறிப்பிடப்படும் கட்டணங்கள் அறவிடுவது உசிதமானதென உத்தேசித்திருக்கின்றது.*

**சந்தைக் கட்டணம் அறவிடுதல் (சேவைக் கட்டணங்கள் உட்பட)**

| | | ரூபா ச. |
|---|---|---|
| 1. | கூரையுடன் மரக்கறிக் கடைக்கான சிறுதுண்டு | 150 0 |
| 2. | கூரையில்லாத மரக்கறி கடைக்கான சிறுதுண்டு | 100 0 |
| 3. | கூரையுடன் சில்லறைக் கடைக்கான சிறுதுண்டு | 150 0 |
| 4. | கூரையில்லாத சில்லறைக் கடைக்கான சிறுதுண்டு | 100 0 |
| 5. | கூரையில்லாத பழக்கடைக்கான சிறுதுண்டு | 100 0 |
| 6. | கூரையுடன் புடவைக் கடைக்கான சிறுதுண்டு | 150 0 |
| 7. | கூரையில்லாத புடவைக் கடைக்கான சிறுதுண்டு | 100 0 |
| 8. | வாகனங்கள் மூலம் வியாபாரம் செய்யப்படின் (வாகனத்திற்கு) | 100 0 |
| 9. | வேறு சிறு வியாபாரங்கள் | 50 0 |

**பிரதேச சபைக்குச் சொந்தமான நிலங்களை குத்தகைக்கு விடல்**

| | |
|---|---|
| வியாபார நோக்கம் கருதி (சேவைக் கட்டணங்கள் தவிர்ந்த) | 2,000 0 |
| வியாபார நோக்கம் கருதாத (சேவைக் கட்டணங்கள் தவிர்ந்த) | 1,000 0 |

11-135/11

---

**திக்குவெல்லை பிரதேச சபை**

விளம்பர அறிவித்தல் - கட்புல சூழல் (அங்கீகரிக்கப்பட்ட இடைக் காலச்சட்டம் இலக்கம் 39 ஆம் பகுதி) - 2014

திக்குவெல்லை பிரதேச சபையினால் 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 6.1.5 (VIII) இன் கீழ், கீழ் குறிப்பிடப்படும் பிரேரணைகள் யாவும் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டது என்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றது.

கிறிசாலி முத்துகுமாரன,
தலைவர்,
திக்குவெல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
திக்குவெல்லை,
2013, ஒற்றோபர் 14.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122, 126 VII (ஈ) ஆகிய பிரிவுகளின் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி 1988.08.23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிவிஷேட வர்த்தமானியின் IV (அ) பிரிவில் கௌரவ அமைச்சர் மூலம் அறிவிக்கப்பட்டதுமான திக்குவெல்லை பிரதேச சபையின் இடைக்காலச் சட்டத்திற்கமைய திக்குவெல்லை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் விளம்பர அறிவித்தல் (பெனர் உட்பட) நிர்மாணிப்பது, காட்சிப்படுத்துவது போன்றவற்றிற்கு கீழே குறிப்பிடப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணம் 2014.01.01 ஆந் திகதி முதல் மீண்டும் திருத்தியமைக்கப்படும் வரை 2014 ஆம் வருடத்திற்கு அறவிடப்படுவது உசிதமானது என தீர்மானித்திருக்கின்றது.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | அனுமதிப்பத்திரம் | 3 மாதங்களுக்கு அல்லது அதற்குக் குறைந்த ரூபா ச. | 3 மாதங்களுக்கு மேல் அல்லது ஒரு வருடத்திற்கு ரூபா ச. |
|---|---|---|---|
| 1. | சுவரில் அல்லது அறிவித்தல் பலகையொன்றின் மூலம் காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தல் ஒன்றிற்காக வீட்டின்/கட்டிடத்தின் /வியாபார நிலையத்தின்/ கூரையில் (நிரந்தர) சதுர அடிக்கு | 75 0 | 75 0 |
| 2. | பொது மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் பிரதான பாதையின் ஏதேனும் ஓரிடத்தில் பொருத்தப்பட்டுள்ள விளம்பரப்பலகை ஒன்று அல்லது பெனர் ஒன்றிற்காக (ஒரு சதுர அடிக்கு) | 20 0 | 50 0 |

11-135/12

---

**திக்குவெல்லை பிரதேச சபை**

காணி அபிவிருத்தி தொடர்பான தீர்மானம் - 2014

திக்குவெல்லை பிரதேச சபையினால் 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 6.1.5 (X) இன் கீழ், கீழே குறிப்பிடப்படும் பிரேரணைகள் யாவும் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டது என்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றது.

கிறிசாலி முத்துகுமாரன,
தலைவர்,
திக்குவெல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
திக்குவெல்லை,
2013, ஒற்றோபர் 14.

**தீர்மானம்**

அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள காணியில் மண் அல்லது வேறு திரவியங்களைப் பயன்படுத்தி அபிவிருத்தி செய்தல் தொடர்பாக கட்டணம் அறவிடுதல்

அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள காணிகளில் மண் அல்லது வேறு பொருட்களைப் பயன்படுத்தி அபிவிருத்தி செய்யும்போது அது தொடர்பாக மற்றைய நிறுவனத்தின் பரிந்துரையின் கீழ் பிரதேச சபை சட்டத்தின் 122 (i) மற்றும் 19 (xxxii) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணங்களை அறவிடுவதற்கு உத்தேசித்திருக்கின்றது.

10 பேர்ச்சஸ் வரை காணி மீள் நிரப்பப்படும்போது, குறைந்த வருமானம் உள்ளவராயின் ஒரு அடிக்கு ரூபா 30 பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கவும்.

**அட்டவணை**

| இடத்தின் முழு அளவு | மண் தொடர்பாக ரூபா ச. | வேறு பொருட்கள் தொடர்பாக ரூபா ச. |
|---|---|---|
| ஒரு சதுர அடிக்கு முதல் 300 மி.மீ. வரை | 100 0 | 150 0 |
| ஒரு சதுர அடிக்கு 300 மி.மீ. இலிருந்து 750 மி.மீ. வரை | 400 0 | 500 0 |
| ஒரு சதுர அடிக்கு 750 மி.மீ. இலிருந்து 1500 மி.மீ. வரை | 600 0 | 700 0 |

11-135/13

**திக்குவெல்லை பிரதேச சபை**

க்(G)ரமபோன், ஒலி பெருக்கி இயந்திரம் ஆகியவற்றை செயற்படுத்தல் - 2014

*திக்குவெல்லை பிரதேச சபையினால் 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 6.1.5 (XIV) இன் கீழ், கீழ் குறிப்பிடப்படும் பிரேரணைகள் யாவும் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டது என்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றது.*

*கிறிசாலி முத்துகுமாரன,*
*தலைவர்,*
*திக்குவெல்லை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*திக்குவெல்லை,*
*2013, ஒற்றோபர் 14.*

***தீர்மானம்***

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின்படி,*

*122, 126 VII (ஈ) ஆகிய பிரிவுகளின் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி 1988.08.23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிவிசேட வர்த்தமானியின் IV (அ) பிரிவில் கௌரவ அமைச்சர் மூலம் அறிவிக்கப்பட்டதுமான திக்குவெல்லை பிரதேச சபையின் இடைக்காலச் சட்டத்திற்கமைய அங்கீகரிக்கப்பட்ட கட்டளைச்சட்டம் (13) திக்குவெல்லை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் க்ரமபோன்/ ஒலிபெருக்கி/ சுயமாக சத்தத்தை உண்டு பண்ணும்/ எதிரொலிக்கும் ஏதாவது உபகரணம் இயக்கும்போது/ இயக்கப்படும்போது/ இயக்க திட்டமிடும்போது/ இயக்க வேறொருவருக்கு இடமளிக்கும்போது அந்த அதிகரித்த சத்தத்தின் காரணமாக அல்லது அதன் எதிரொலியினால் அல்லது அதன் தொடர்ச்சியான இயக்கத்தினால் அயலில் வசிப்பவர்களுக்கு தொல்லை ஏற்படின் அதனைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.*

*அப்படி இயக்க திட்டமிட்டால் அதற்கு அனுமதிப்பத்திரக் கட்டணமாக ஒரு நாளைக்கு ரூபா 250 அறவிடப்பட வேண்டும் என உத்தேசித்துள்ளது.*

*11-135/14*

---

**திக்குவெல்லை பிரதேச சபை**

வேறு கட்டணங்கள் அறவிடுதல் - 2014

*திக்குவெல்லை பிரதேச சபையினால் 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 6.1.5 (XV) இன் கீழ், கீழ் குறிப்பிடப்படும் பிரேரணைகள் யாவும் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டது என்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றது.*

*கிறிசாலி முத்துகுமாரன,*
*தலைவர்,*
*திக்குவெல்லை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*திக்குவெல்லை,*
*2013, ஒற்றோபர் 14.*

**தீர்மானம்**

*2014 ஆம் ஆண்டிற்காக திக்குவெல்லை பிரதேச சபை மூலம் வழங்கப்படும் கீழ் குறிப்பிட்ட சேவைகளுக்கு கட்டணம் செலுத்தப்பட வேண்டுமென உத்தேசித்திருக்கின்றது.*

| | | ரூபா ச. |
|---|---|---|
| 1. | சொத்துக்களின் உரிமை மாற்றத்திற்கான விண்ணப்பக் கட்டணம் (ஆதன வரி) | 400 0 |
| 2. | வரிப்பண சான்றிதழ் விநியோகம் | 200 0 |
| 3. | வீதிச் சான்றிதழ், கைமாற்ற முடியாத சான்றிதழ் | 300 0 |
| 4. | கட்டிட விண்ணப்பக் கட்டணம் | 400 0 |
| 5. | அளவையாளர் திட்டம் விண்ணப்பப் படிவம் | 400 0 |
| 6. | சுற்றாடல் அனுமதிப்பத்திர விண்ணப்பக் கட்டணம் | 200 0 |
| 7. | துவிச்சக்கர அனுமதிக் கட்டணம், எழுதுகருவி கட்டணம் | 16 0 |
| 8. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பக் கட்டணம் | 200 0 |
| 9. | சூழல் பரிசீலனை விண்ணப்பக் கட்டணம் | 400 0 |
| 10. | மாடு அறுப்பதற்கான அனுமதி விண்ணப்பப்படிவம் | 2,000 0 |
| 11. | பிரதேச சபைக்குரிய இடத்தை வாடகைக்கு விடல் வியாபார விடயத்திற்காக (ஒரு நாளைக்கு) | 2,000 0 |
| | வியாபாரமல்லாத விடயத்திற்காக (ஒரு நாளைக்கு) | 1,000 0 |
| 12. | ஆபத்துக்குரிய மரங்கள் தொடர்பான முறைப்பாட்டு விண்ணப்பத்திற்கு பலா மரம் (ஒன்றிற்காக) | 500 0 |
| | ஏனைய வேறு மரத்திற்காக | 200 0 |
| 13. | நீர் இணைப்பிற்காக பிரதேச சபைக்கு உரித்தான பாதைகளை உடைக்கும்போது அறவிடும் கட்டணம் (ஒரு சதுர அடிக்கு) | |
| | கொங்ரீட் பாதைக்கு | 1,200 0 |
| | தார் பாதைக்கு | 800 0 |
| | மண் பாதைக்கு | 500 0 |
| | காபட் பாதைக்கு | 3,200 0 |

*11-135/15*

---

**வாரியப்பொல பிரதேச சபை**

*அனுமதிப்பத்திரங்கள் மீது கட்டணம் விதித்தல் – 2014*

*வாரியப்பொல பிரதேச சபையால் 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 13 ஆந் திகதி நடாத்தப்பெற்ற பிரதேச சபைக் கூட்டத்தில் பிரேரணை இலக்கம் 1 இன் பிரகாரம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

*அதன்படி வாரியப்பொல பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியினுள் வரியிற்குட்பட்ட எந்தவொரு வளவைப் பாவிக்கும் உரிமையாளரால் அது ஆரம்பிக்கப்பட்டு 30 நாட்களுக்குள் அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என மேலும் அறியத்தருகின்றேன்.*

*ஆனந்த ஜயலத்,*
*தலைவர்,*
*வாரியப்பொல பிரதேச சபை.*

*பிரதேச சபை,*
*வாரியப்பொல,*
*2013, செத்தெம்பர் 20.*

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 149 ஆம் பிரிவின் கீழ் வாரியப்பொல பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள துணை உறுப்புறையில் விபரிக்கப்பட்டுள்ள இங்கு கீழ் அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதும் ஒரு விடயத்துக்காக வாரியப்பொல பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள ஏதும் ஒரு வளவைப் பாவிப்பதற்கு அனுமதி வழங்கி 2014 ஆம் ஆண்டுக்கு வழங்கப்படுகின்ற ஏதும் ஒரு அனுமதிப்பத்திரம் சம்பந்தமாக அந்த அட்டணையின் II ஆம் நிரலில் உள்ள குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரக் கட்டணத்தை நியமித்து அறவிடப்பட வேண்டுமென்று தீர்மானிக்கின்றேன்.*

**அட்டவணை**

| நிரல் I அதிகாரம் வழங்கப்பட்ட விடயம் | | நிரல் II வளவின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 1 முதல் 750 வரை ரூபா ச. | ரூபா 751 முதல் 1,500 வரை ரூபா ச. | ரூபா 1,500 க்கு மேல் ரூபா ச. |
| (1) | பேக்கரி ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| (2) | சோற்றுக்கடை ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| (3) | தேனீர் அல்லது கோப்பிக் கடை ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 300 0 | 500 0 | 1,000 0 |
| (4) | உணவகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| (5) | சவரத்தொழில் செய்யும் இடத்தை நடாத்திச் செல்வதற்கு | 300 0 | 500 0 | 1,000 0 |
| (6) | மீன்விற்பனை நிலையத்தை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| (7) | குளிரூட்டப்பட்ட இறைச்சி விற்பனைக்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| (8) | ஹோட்டல் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| (9) | முட்டை விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 350 0 | 500 0 | 1,000 0 |
| (10) | மாட்டு இறைச்சிக் கடை ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| (11) | விலங்குகள் அறுக்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| (12) | கோழிப்பண்ணை ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| (13) | அடகுகள் பதிவு செய்யும் இடத்தை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| (14) | ஐஸ் தொழிற்சாலை ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| (15) | குளிர்பான தொழிற்சாலை ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| (16) | பன்றிப் பண்ணை ஒன்றை நடாத்திச் செல்வதற்கு 4 இற்கு மேற்பட்ட தொகை | 300 0 | 600 0 | 1,000 0 |
| (17) | பன்றிப் பண்ணை ஒன்றை நடாத்திச் செல்வதற்கு 4 இற்கு குறைவான | 250 0 | 500 0 | 700 0 |
| (18) | மாட்டுப் பண்ணை ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 350 0 | 500 0 | 1,000 0 |
| (19) | பொதுச் சந்தை ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| (20) | தனியார் சந்தை ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| (21) | வாடி வீடு ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |

11-27/1

---

**வாரியப்பொல பிரதேச சபை**

மனதுக்குப்பிடிக்காத, அபாயகரமான மற்றும் மனதுக்குப் பிடிக்காத,
அபாயகரமான வர்த்தக நடவடிக்கைகள் பற்றிய துணை உறுப்புரை - 2014

வாரியப்பொல பிரதேச சபையினால் 2013 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 13 ஆந் திகதி நடாத்தப்பெற்ற பிரதேச சபைக் கூட்டத்தில் பிரேரணை இலக்கம் II இன் பிரகாரம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

